Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 7, 2021

செவ்வாய்க்கிழமை 07 டிசெம்பர், 2021 | ஒளி: 07 கதிர் 172 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## சிறுவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி



சிறப்பு அனுமதியுடன், நாட்பட்ட நோய்கள் அல்லது பல்வேறு சிக்கல்கள் உள்ள சிறுவர்களுக்கு கொரோனா தடுப்பூசிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப சேவைகளின் பணிப்பாளர் டொக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



பாதுகாப்பை உறுதி செய்யக்கோரி

## எதிர்க்கட்சி போராட்டம்

### குசலம் விசாரித்தார் மஹிந்த

■ பா.நிரோஸ்


ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை சபாநாயகரால் உறுதி செய்ய முடியாதுள்ளதாக தெரிவித்த அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸ, ஆளுங்கட்சியின் ஆலோசனைக்களை கேட்டு நடக்கும் சபாநாயகராக அல்லாது, அக்கிராசனத்தைப் பாதுகாக்கும் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன செயற்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2



சபையில் கைகலப்பு;

## விசாரிக்க குழு



■ பா.நிரோஸ்

ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் நடைபெற்ற கைகலப்பு சம்வங்கள் தொடர்பில், சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட விசேட குழு அமைத்து ஆராயப்போவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (06) அமர்வை ஆரம்பித்து வைத்து சபாநாயகர் அறிவிப்பை விடுக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த வெள்ளிக்கிழமை, சனிக்கிழமைகளில் கவலைக்குரிய பல விடயங்கள் சபையில் அரங்கேறியிருந்தன. பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புக்கூற வேண்டிய பிரஜைகள் என்ற வகையில் சபையின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

தொடர்ச்சி P2



பிரியந்தவின் உடல் எச்சங்கள் தாங்கிய

## பேழை ஒப்படைப்பு

பாகிஸ்தான் சியால்கோட் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை, அடித்து துன்புறுத்தப்பட்டு, எரியூட்டி படுகொலை செய்யப்பட்ட இலங்கை பொறியியலாளரான பிரியந்த குமார தியவடனவின் உடல் எச்சங்கள் அடங்கிய பேழை, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

உடல் எச்சங்கள் அடங்கிய பேழையைத் தாங்கிக்கொண்டு, பாகிஸ்தான் நேரப்படி நேற்று (06) மதியம் 12.30 மணியளவில் இலங்கை நோக்கி புறப்பட்ட ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல். 186 விமானம், நேற்று மாலை 5.10 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

தொடர்ச்சி P2



பிரியந்தவின் படுகொலைக்கு

## பேராயர் மல்கம் ரஞ்சித் கண்டனம்

பாகிஸ்தானின் சியால்கோட்டில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் மறைவுக்கு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் இரங்கல் தெரிவித்ததுடன், கொடூரமான மற்றும் மனிதாபிமானமற்ற கொலைக்கு தனது கண்டனத்தையும் தெரிவித்தார்.

மதம் என்ற போர்வையில் இழைக்கப்படும் இதுபோன்ற கொடூரமான, குற்றச்செயல்களால் ஏற்படும் அவலங்களை தடுத்து நிறுத்த அனைத்து நாடுகளின் தலைவர்களும் முனைப்புடன் செயல்பட வேண்டும் என தனது இரங்கல் செய்தியில் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

பிரியந்தவின் படுகொலையைக் கண்டித்து

## உயர்ஸ்தானிகராலயம் முன்பாக ஆர்ப்பாட்டம்

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் படுகொலையைக் கண்டித்து, கொழும்பிலுள்ள பாகிஸ்தான், உயர்ஸ்தானிகராலயத்தின் முன்பாக, பல்வேறு அமைப்புகளால், நேற்று (06) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையரான பிரியந்த குமார கடந்த வெள்ளிக்கிழமை மிக கொடூரமாக படுகொலை செய்யப்பட்டதுடன்,

தொடர்ச்சி P2



பிரியந்த படுகொலை

## 26 பேருக்கு விளக்கமறியல்

பாகிஸ்தானைச் சேர்ந்த தொழிற்சாலை ஒன்றின் முகாமையாளராகக் கடமையாற்றிய இலங்கையரான பிரியந்த குமார, கொடூரமாக அடித்துக்கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட முக்கிய சந்தேக நபர்கள் 26 பேரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பாகிஸ்தானின் குஜராத் நீதிமன்றம், நேற்று (06) உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2



பாகிஸ்தான் பாதுகாக்கத் தவறினால்

## இலங்கையரை மீள அழைக்க வேண்டும்



பாகிஸ்தானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய பாகிஸ்தான் அரசாங்கம் தவறினால் அவர்களை மீள அழைக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று (04) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

தொடர்ச்சி P2

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ்

## 10,000 வீடுகளுகள் அடுத்த ஆண்டு நிர்மாணம்

■ பா.நிரோஸ்

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன், மலையகத்தில் 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சபைக்கு அறிவித்தார்.

நகர அபிவிருத்தி, வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களுக்கான வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு

தொடர்ச்சி P2



அரசாங்கத்திலிருந்து

## வெளியேற அவசரமில்லை

அரசாங்கத்திலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டுமாயின், அதற்காக, அவசரப்பட்டு முடிவுகளை எடுக்க முடியாது எனவும், தொலைநோக்குப் பார்வை தேவை எனவும் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (06) கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், கூட்டணியை விட்டு வெளியேறுமாறு கட்சியைச் சேர்ந்த பலர் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் கூட்டணியில் இருந்து விலகும் எண்ணம் இதுவரை இல்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக்

தொடர்ச்சி P2





## கடலுக்குச் சென்று மாயமான மூவரும் சடலங்களாக மீட்பு

■ சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்

வவுனியாவில் இருந்து வருகை தந்த இளைஞர் மூவர், முல்லை கடலில் மாயமாகியிருந்தனர். அதிலொருவர் சடலமாக மீட்கப்பட்டார். மேலுமிரு இளைஞர்களும் சடலங்களாக நேற்று (06) காலை மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (05) இரவு,

தொடர்ச்சி P2

## 11 குற்றச்சாட்டுகளில் இருந்து ரவி உட்பட 10 பேர் விடுதலை



இலங்கை மத்திய வங்கி பிணை முறிகள் மோசடி தொடர்பில், 22 குற்றச்சாட்டுகளை சுமத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், 11 குற்றச்சாட்டுகளிலிருந்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட பிரதிவாதிகள் 10 பேர் விடுதலைச் செய்யப்பட்டனர். மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றமே, இந்த உத்தரவை நேற்று(06) பிறப்பித்தது.

தொடர்ச்சி P2





## சர்வதேச தரத்தில் 'லாப் காஸ்'

தமது நிறுவனம் உயர்தரமான எரிவாயுத் தொழிற்சாலையையும் வர்த்தக நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாக 'லாப் காஸ் நிறுவனம்' தெரிவித்துள்ளது.

இலங்கையைப் போன்றே பங்களாதேஷ், மியன்மார், மாலைதீவு, இந்தியா மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கும் எரிபொருளை விநியோகிப்பதாகவும் லாப் எரிவாயுவில் ஏதும் பிரச்சினைகள் இருந்திருந்தால் அந்நாடுகளில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது

ஆனால், அவ்வாறான முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கவில்லை என்றும் தமது நிறுவனம் கடந்த 25 வருடங்களாக சர்வதேச தரத்துக்கு அமைய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அந்நிறுவனத்தின் தலைவர் டபிள்யு.எச்.கே.வேஹப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

## லிட்ரோ காஸ் சிலிண்டர் நுகர்வோரெனில் கவனிக்குக

சமையல் எரிவாயு சிலிண்டர்களில் குமிழ்கள் ஏற்படுதல், காஸ் அடுப்புகள் வெடித்தல், இணைக்கும் குழாய்களில் வெடிப்பு ஏற்படும் சம்பவங்கள் நாட்டின் பல பாகங்களில் நேற்றும் (06) இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட ஆரம்பித்ததை அடுத்து, காஸ் சிலிண்டர் பயன்படுத்துவதை பலரும் குறைத்துக்கொண்டுள்ளனர். இன்றேல், தற்காலிகமாக கைவிட்டுள்ளனர். காஸ் வேண்டாம், விறகு அடுப்பே போதும் அல்லது மண்ணெண்ணை அடுப்பே போதுமென பலரும் நினைத்துவிட்டனர்.

எனினும், 3 நிபந்தனைகளின் கீழ், காஸ் சிலிண்டர்களை விநியோகிப்பதற்கு நுகர்வோர் அதிகார சபை, அண்மையில் அனுமதியளித்திருந்தது.

இந்நிலையில், சிலிண்டரில் ஒரு வித்தியாசம் ஏற்படுத்தும் வகையில், லிட்ரோ காஸ் சிலிண்டர் நிறுவனம், அறிவிப்பொன்றை நேற்று (06) விடுத்திருந்தது. அத்துடன், அந்த ஏற்பாடுகளுடன் கூடிய சிலிண்டர்களை விற்பனைச் செய்யும் நடவடிக்கையையும் ஆரம்பித்துவிட்டது.

லிட்ரோ காஸ் எரிவாயு சிலிண்டரை நீங்கள்,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## எதிர்க்கட்சி போராட்டம்

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வை (06) ஐக்கிய மக்கள் சக்தியினர் புறக்கணித்து, பாராளுமன்ற கட்டட வளாகத்தில் பாரிய போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர். இதனால் ஐக்கிய மக்கள் சக்தியினர் இல்லாது வரவு செலவு திட்டம் மீதான நேற்றைய (06) குழுநிலை விவாதம் நடைபெற்றது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் தலைமையில் நடைபெற்ற இப்போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த எம்.பிகள் கறுப்புப் பட்டி அணிந்திருந்ததோடு, ''காஸ் இல்லை. மின்சாரம் இல்லை. உணவில்லை. அரசாங்கத்துக்கு மூளை இல்லை'', "சேர் பெயில், சேரின் பாராளுமன்றமும் பெயில்", போன்ற பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அச்சுறுத்தியுள்ளதோடு, அவரை தாக்கவும் முயற்சித்துள்ளனர். இது தொடர்பில் சபாநாயகர் மௌனமாக இருக்கிறார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய சபாநயாகரால் முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

ஆளுங்கட்சியின் பக்கம் இருந்து எதிர்க்கட்சியின் பக்கமாக வந்து மனுஷ நாணயக்காரவை தாக்க முயற்சித்த அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கு எதிராக சபாநாயகர் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆளுங்கட்சியின் ஆலோசனைக்களை கேட்டு நடக்கும் சபாநாயகராக அல்லாது, அக்கிராசனத்தைப் பாதுக்காக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறினார்.

இதேவேளை இப்போராட்டத்தில் ஈடுபட்ட எம்.பிகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சென்று நற்புறவாக சந்தித்து கலந்துரையாடியதோடு, இதுபோன்ற போராட்டங்களை ஏற்பாடு செய்யும்போது அதிகளவான பாராளுமன்ற உறுப்பினர்களை அதில் கலந்துகொள்ள செய்ய வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியினரிடம் தெரிவித்தார்.

# விசாரிக்க குழு

சபைக்கு நடந்த இச்சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்காக ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை தான் நியமிக்க உள்ளேன். இதற்கு அனைவரது ஒத்துழைப்பு அவசியம் எனவும் தெரிவித்தார்.

## சிறுவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி

எந்தவொரு கெரோனா வைரஸ் மாறுபாடும் வயதைப் பார்க்காது என்று குறிப்பிட்ட அவர், புதிய ஒமிக்ரோன் வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த தடுப்பூசி மிகவும் முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

## பேழை ஒப்படைப்பு

நாட்டிற்கு கொண்டு வரப்படும் பிரியந்த குமார தியவடனவின் உடற்பாகங்கள், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன்பின்னர், பிரியந்தவின் சொந்தமான ஊரான கனேமுல்ல பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது.

அந்த கிராமமே சோகமயமாகக் காட்சியளிப்பதுடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும், அவரது வீட்டுக்குச் சென்று உறவினர்களுக்கு ஆறுதல் கூறிவருகின்றனர்.

## கடலுக்குச் சென்று மாயமான மூவரும் சடலங்களாக மீட்பு

ஓர் இளைஞனின் சடலம் மீட்கப்பட்ட நிலையில், நேற்றுக் காலை மேலும் இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா, மதவுவைத்த குளத்தை சேர்ந்த மனோகரன் தனுஷன் (வயது_27), சிவலிங்கம் சகிலன் (வயது_26) , தோணிக்கல் பகுதியை சேர்ந்த விஜயகுமாரன் தர்சன் (வயது_26) ஆகியோரே, இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு கடற்கரைக்கு நேற்று முன்தினம் (05) மாலை வானில் வந்த மூன்று இளைஞர் குளித்து கொண்டிருந்த போது, திடீரென கடலில் மாயமாகியுள்ளனர்.

குறித்த மூவரையும் நீண்ட நேரமாக காணாத நிலையில், அவர்களுடன் கடலுக்கு சென்ற புதுக்குடியிருப்பை சேர்ந்த யுவதி, முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

இதையடுத்து, பொலிஸார், கடற்படையினர், பொதுமக்கள் இணைந்து அவர்களை தேடும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

தேடுதலின் போது , நேற்று முன்தினம் இரவு, ஒருவருடைய சடலம் மீட்கப்பட்டது.

இந்நிலையில், நேற்றுக் காலை, வண்ணாங்குளம் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க கடற்தொழிலாளர்களின் 5 படகுகள் கடலில் இறங்கி, தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை, இளைஞர்கள் நீரில் மூழ்கிய இடத்தில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள தீர்த்தக்கரை கடற்கரையில் வைத்து 2ஆவது இளைஞனின் சடலத்தை மீனவர்கள் மீட்டுள்ளார்கள்.

அதன் பின்னர், தொடர்ச்சியாக கடலில் தேடுதல் நடத்திய போது, சம்பவம் நடைபெற்ற பகுதியில் இருந்து 6 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அளம்பில் பகுதியில், மீனவர் ஒருவரின் கரைவலையில் சிக்கிய நிலையில், மூன்றாவது இளைஞனின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

இளைஞர்களின் சடலம், கடல்வழியாக மீனவர்களின் படகில் முல்லைத்தீவு கடற்கரைக்கு கொண்டுவரப்பட்டு, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு ண்டுசெல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த முல்லைத்தீவு பொலிஸார், மரண விசாரணைகளின் பின்னர், சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக, தெரிவித்துள்ளனர்.

## இலங்கையரை மீள அழைக்க வேண்டும்

சந்தேக நபர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் இவ்வாறான கொடூரக் கொலைகளை மன்னிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

2019 ஏப்ரலில் ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பின் போது, இலங்கையும் மத கடும்போக்குவாதத்தை எதிர்கொண்டதாகவும், இது சமூகத்தை பெரிதும் உலுக்கியது என்றும் கூறினார்.

எந்தவொரு தனிநபரும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு பலியாகிவிடக் கூடாது எனத் தெரிவித்த அவர், இலங்கையர்களுக்கு இவ்வாறான சம்பவங்கள் தொடரக்கூடாது எனவும் குறிப்பிட்டார்.

உள்நாட்டில் மத கடும்போக்குவாதிகள் தலைதூக்குவதுடன், கடும்போக்குவாதத்தைச் சேர்க்கின்றனர் என்ற அவர், இது அனைத்து வடிவங்களிலும் கண்டிக்கப்பட வேண்டும், தோற்கடிக்கப்பட வேண்டும், முறியடிக்கப்பட வேண்டும் என்றார்.

## பேராயர் மல்கம் ரஞ்சித் கண்டனம்

இந்தக் கொலைக்கு எதிராக பாகிஸ்தான் தலைமை உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## உயர்ஸ்தானிகராலயம் முன்பாக ஆர்ப்பாட்டம்

உயிருடன் எரிக்கப்பட்டமை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், பிரியந்தவின் மரணத்துக்கு நீதி கோரியே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

பிக்குகள், கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் இந்து மற்றும் முஸ்லிம் மதகுருமார்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, பிரியந்த குமாரவுக்கு நீதி கோரி பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்திடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

# 26 பேருக்கு விளக்கமறியல்

26 சந்தேக நபர்களையும் சியால்கோட் பொலிஸார் குஜராத்தில் உள்ள பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தியபோதே அங்கு அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதாக பாகிஸ்தானில் உள்ள தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும், சியால்கோட்டில் உள்ள உகோகி காவல் நிலையத்தின் பொறுப்பதிகாரி, அர்மகன் மக்ட் ராஜ்கோ இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலையின் 900 ஊழியர்களுக்கு பாகிஸ்தான் தண்டனைச் சட்டம், 302, 297, 201, 427, 431, 157, 149 ஆகியவற்றின் கீழ் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 7 மற்றும் 11 டபிள்யூ பிரிவுகளின் கீழ் முதற்கட்ட புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சம்பவத்துடன் தொடர்டைய சந்தேக நபர்களைக் கைதுசெய்ய சியால்கோட் மாவட்டத்தில் உள்ள சம்பிரியல், தஸ்கா மற்றும் பஸ்ரூர் ஆகிய கிராமங்களில் தேடுதல் நடவடிக்கை தொடங்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காட்சிகள் மற்றும் வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களைப் பயன்படுத்தி வருவதாக சியால்கோட் பொலிஸார் தெரிவித்ததுடன், சம்பவம் தொடர்பாக இதுவரை 235 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

தெய்வ நிந்தனை செய்த குற்றச்சாட்டில் தொழிற்சாலை ஊழியர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர், பிரியந்த குமாரவை கொடூரமாகத் தாக்கி கொலைசெய்துள்ளனர்.

சியால்கோட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களில் சம்பவத்தை வீடியோ எடுத்தவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

முக்கிய சந்தேக நபர்களான மொஹமட் தல்ஹா மற்றும் ஃபர்ஹான் இட்ரிஸ் ஆகியோர் அடங்கிய குழுவினர், அடையாளம் தெரியாத இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ராஜ்கோ இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலை சனிக்கிழமை மூடப்பட்டதுடன், அதன் ஊழியர்கள் கைதிலிருந்து தப்புவதற்கு தலைமறைவாகியுள்ளனர் என்று பாகிஸ்தானின் டான் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

பிரியந்த குமார தியவதனவை அடித்துக் கொன்று அவரது உடலை எரித்ததாக 'தாரிக் ஈ லப்பயிக் பாகிஸ்தான்' என்ற அரசியல் குழு மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதன் குழு ஒரு அரசியல் கட்சி மற்றும் சக்திவாய்ந்த தீவிர வலதுசாரிக் குழு என்றும் அது பாகிஸ்தான் அரசியலில் மட்டுமல்ல, சிவில் சமூகத்திலும் செல்வாக்கு செலுத்துவதாகவும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், பிரியந்த குமார தியவதன படுகொலையுடன் தமக்கு தொடர்பில்லை என கட்சி மறுத்துள்ளது. 2018 பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அக்கட்சி எந்த இடத்திலும் வெற்றி பெறவில்லை. இருப்பினும், பஞ்சாப் மாநிலத் தேர்தலில் மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருந்தது.

## லிட்ரோ காஸ் சிலிண்டர் நுகர்வோரெனில் கவனிக்குக

கொள்வனவு செய்பவர்களாயின், புதிய சிலிண்டர்கள் வால்வுகளில் சிவப்பு மற்றும் வெள்ளை நிறத்துடன் கூடிய பொலித்தீன் பாதுகாப்பு உறை இடப்பட்டிருக்குமென நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

ஆகையால், அதனை பார்த்துவிட்டு கொள்வனவு செயலாமென அச்சபை அறிவித்துள்ளது. பழைய சிலிண்டர்களில், சாதாரண பாதுகாப்பு உறை மட்டுமே இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெளியேற அவசரமில்லை

கட்சி வலுப்பெற்று, கீழ் நிலைகளையும் கட்டமைப்புகளையும் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கலாம் என்று குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியானது கூட்டமைப்பிலிருந்து விலகி சுதந்திரமாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் கட்சியின் அடித்தளம் வலுவாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் 2020 இல் அமைக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் இருக்க மொத்தம் 5 ஆண்டுகள் உள்ளன. இந்த காலகட்டத்தில், பல்வேறு கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். எனவே எதிர்காலத்தை இன்னும் கணிக்க முடியாது என்றார்.

மேலும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றுவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்தால், அது இலகுவானதாக இருக்காது என்றும் ஜயசேகர தெரிவித்தார்.

கூட்டணியில் உள்ள 14 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மட்டும் வெளியேற்றப்பட மாட்டார்கள், மேலும் 12 கட்சிகள் கூட்டமைப்புக்குள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் இல்லாத ஆனால் தீவிர ஆதரவாளர்களும் எங்களிடம் உள்ளனர். பக்கச்சார்பான நடவடிக்கையால் அவர்கள் மகிழ்ச்சி அடையவில்லை. எனவே நேரம் வரும்போது, அது எவ்வாறு செல்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும் என்றார்.

## 11 குற்றச்சாட்டுகளில் இருந்து ரவி உட்பட 10 பேர் விடுதலை

அமல் ரணராஜா, நாமல் பலல்லே மற்றும் ஆதித்ய பட்டபெதிகே ஆகிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய விசேட குழாம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று(06) எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் பிரதிவாதிகள் முன்வைத்த அடிப்படை ஆட்சேபனை தொடர்பிலான உத்தரவைப் பிறப்பித்த நீதிபதிகள் குழாம், பெர்பச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனம் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள போதிலும், தற்போது அந்நிறுவனம் இல்லை என்பதால் அதற்கெதிரான11 குற்றச்சாட்டுகளை முன்கொண்டு செல்வதற்கான எவ்வித சட்ட ஏற்பாடுகள் இல்லையென தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, பிரதிவாதிகளுக்கு எதிரான 22 குற்றச்சாட்டுக்களில், 11 குற்றச்சாட்டுகளை நீக்கிக்கொள்வதற்கு நீதிபதிகள் குழாம் அறிவித்தது.

## 10,000 வீடுகளுகள் அடுத்த ஆண்டு நிர்மாணம்

தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், நகர்ப்புறங்களில் உள்ள குறைந்த வசதிகளைக் கொண்டவர்களுக்கான வீட்டுத் திட்டத்தின் மூலம் 2024ம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின்கீழ் அனைத்து குடும்பங்களுக்கும் அனைத்து வசதிகளையும் கொண்ட வீடுகளை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது எனவும் கூறினார்.

2024 ஆம் ஆண்டுக்குள் கொழும்பில் உள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட வீடுகளை மாடிவீட்டுத் திட்டமாக முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மலையக மக்களுக்கு 4,000 வீடுகளையும் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுகொடுத்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

## வரம்பற்ற விலை உயர்வுகள் குறித்து பிரதமர் கவனம் செலுத்தினார்

கொரோனா வைரஸ் தொற்று நிலைமைகளுக்கு மத்தியில், வர்த்தகர்களின் வறையரை வரம்பற்ற விலை உயர்விலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று (06) பிரதமரை சந்தித்த வர்த்தக பிரதிநிதி கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்லும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளங்கண்டு அவர்களுக்கு துரித தீர்வினை பெற்றுக் கொடுக்குமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

பொருட்களின் விலையில் அடிக்கடி ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் அதனூடாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்தில் ஏற்படும் தாக்கத்தால், வர்த்தகர்களின் வறையரை வரம்பற்ற விலை உயர்விலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பது தொடர்பிலும் பிரதமர் இதன்போது கவனம் செலுத்தினார்.

தொற்று நிலைமைக்கு மத்தியில் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுத்த வர்த்தகர்களுக்கு மேலும் கடன் நிவாரண காலத்தை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏலம் விடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறல் தொடர்பில் இதன்போது வர்த்தகர்கள் பிரதமருக்கு தெளிவுபடுத்தினர்.

பொருட்களின் விலையில் அடிக்கடி ஏற்படும் விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் அதனூடாக மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் வர்த்தகர்களின் வறையரை வரம்பற்ற விலை உயர்விலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பது குறித்தும் பிரதமர் கவனம் செலுத்தினார்.

சஜித்தின் தவறான முடிவால்

# வடக்கு மக்கள் பாதிப்பு

பா.நிரோஸ்



எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, அமைச்சராக இருந்தபோது முறையான திட்டமிடல் இல்லாது வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதன், சஜித்தின் தவறான முடிவே இதற்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று (06) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், மலையக மக்களை பொறுத்தவரையில் அவர்களுடைய வாழ்வாதாரம் என்பது தோட்டங்களில் வேலை செய்வதே. அவர்களுக்கு முறையான வீடு, காணி வசதிகளை பெற்றுத்தருவதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கூறுகிறார். ஆனால் அவர்களின் தேவைகள் இதுவரையில் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மலையக மக்களுக்கான காணி, வீடுகளை அதிகளவில் விரைவாக வழங்க வேண்டும். வட மாகாணத்தில் 2018, 2019ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீடுகள் ஒரு திட்டமிடல் இல்லாது வழங்கப்பட்டுள்ளது. முறையான திட்டமிடல் இல்லாமல் அப்போது இதற்குப் பொறுப்பான சஜித் பிரேமதாஸ இதனை வழங்கியதால், புதிய வீட்டுத் திட்டங்களில் பெறமுடியாமல் பலர் உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இப்போது எதிர்க்கட்சி தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாஸ இது தொடர்பில் பாராளுமன்றத்தில் இதுவரையில் பேசவில்லை என்பது கவலையளிக்கிறது. இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் இந்திக்க அநுருத்தவிடம் தான் பல்வேறு முறை கோரிக்கைகளை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.



குழு எல்லாம் சரிவராது

## சபாநாயகரே விசாரிக்க வேண்டும்

பா.நிரோஸ்

கடந்த வெள்ளிக்கிழமை, சனிக்கிழமைகளில் சபையில் இடம்பெற்ற கைகலப்பு சம்பவங்கள் தொடர்பில் குழு அமைத்து விசாரணைகளை மேற்கொள்ளாது, சபாநாயகரே நேரடியாக விசாரணைகளை மேற்கொண்டு, உரிய நடவடிக்கை விரைவாக எடுக்க வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (06) அமர்வில் சபாநாயகரின் அறிவிப்பை தொடர்ந்து உரையாற்றிய அவர், பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கைகலப்பு சம்பவங்கள் தொடர்பில் சபாநாயகர் குழு அமைத்து விசாரிப்பதாக கூறுகிறார். ஆனால் இதனை குழு அமைத்து விசாரிக்க வேண்டிய தேவை கிடையாது எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவை ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் சபைக்குள்ளும், சபைக்கு வெளியிலும் தாக்க முயற்சித்ததாகக் கூறி சபாநாயகருக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளனர் என்றார்.

## மனுஷவின் தவறை மறைக்க முயற்சி

பா.நிரோஸ்

சபாநாயகரை அச்சுறுத்தியதாகக் கூறப்படும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார செய்த தவறை அக்கட்சியினர் மறைக்க முயற்சிப்பதாக ஆளுந்தரப்பினர் குற்றம் சுமத்தியதோடு, மனுஷ நாணயக்காரவுக்கு எதிராக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (06) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுங்கட்சியினர் பலர் சபாநாயகருக்கு ஆதரவாகவும், ஐக்கிய மக்கள் சக்தியினரின் செயற்பாடுகளை கண்டித்தும் உரையாற்றியிருந்தனர்.

### சிற்றுண்டிச்சாலைக்கு வந்தது எப்படி?

பாராளுமன்றத்துக்கு வருவதற்கு தமக்குப் பாதுகாப்பில்லை என்றே ஐக்கிய மக்கள் சக்தியினர் சபை நடவடிக்கைகளை புறக்கணித்துள்ளனர். ஆனால், இன்று காலை ஐ.ம.சக்தியின் எம்.பிகள் அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிற்றுண்டிச்சாலைக்கு வந்துள்ளனர் என ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸாம்மில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு இல்லையென கூறுபவர்கள் எவ்வாறு பாராளுமன்ற சிற்றுண்டிச்சாலைக்கு வந்தனர் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாம் இருக்கும் வரையில் சபாநாயகர் மீது எவரையும் கையைவைக்க விட மாட்டோமென ஆளுங்கட்சியின் பிரதமக் கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, மனுஷ எம்.பி மீது ஆளுங்கட்சியினர் விசாரணைகளை கோரியுள்ளதாகவும், இது தொடர்பில் விசாரணைகளை சபாநாயகர் மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினருக்கு பாராளுமன்றத்தில் இடமில்லை. பாராளுமன்றத்தில் ஜனநாயகம் இல்லையென சர்வதேசத்துக்குக் காட்டுவதற்கு கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பி போன்றோர் முயல்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

10 ஆயிரம் வீட்டு திட்டங்கள்

## 3 மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படும்

பா.நிரோஸ்



இந்திய அரசாங்கத்தின் 4 ஆயிரம் வீட்டுத் திட்டங்கள் இம்மாத இறுதிக்குள் முழுமையாக நிறைவடையுமெனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்திய அரசாங்கத்தின் 10 ஆயிரம் வீட்டுத் திட்டங்களையும் மூன்று மாதங்களுக்குள் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் கூறினார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (06) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு அமைச்சு என்பதை என்னுடைய அமைச்சாக நான் பார்க்கவில்லை. மலையக மக்களை பிரதிநித்துவப்படுத்தக்கூடிய அமைச்சாகவே பார்க்கிறேன். எனது அமைச்சின் 977 மில்லியன் ரூபாய் வீடமைப்புக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளது

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு முழுமையடையாத திட்டங்களை முழுமைப்படுத்த 700 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேயிலை தோட்டங்களில் பணிப்புரியும் பெண் தொழிலாளர்களுக்கு கடந்த காலங்களில் உணவை உட்கொள்ளவதற்கான இடங்களோ அல்லது கழிவறைகளோ இல்லை. நாம் இதனை அமைத்துகொடுத்துள்ளோம் என்றார்.

இந்திய வீட்டு திட்டத்தின் கீழுள்ள 1936 வீடுகளுக்கு நீர், மின்சாரம் இந்த மாத இறுதிக்குள் 2,064 வீடுகளையும் நிர்மாணித்து கையளிக்க எதிர்பார்த்துள்ளோம். ஐந்து வருடத்துக்குள் முடிக்க வேண்டிய வேலையை நாம் ஒரே வருடத்தில் முடித்துள்ளோம்.



## அரசாங்கத்திடம் மன்றாடுவோம்

பா.நிரோஸ்

வடக்குக், கிழக்கு மக்களின் துயரங்களை போக்க தற்போதைய அரசாங்கம் முன்வருமெனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ், அரசாங்கத்திடம் மன்றாடியாவது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வேன் என்றார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்று (06) கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், முன்னாள் வீடமைப்பு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸ, வீட்டுத் திட்டங்கள் வரிய மக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது என்பதைபோல பாரிய செலவில் விளம்பரங்களை செய்திருந்தார். எனினும், இந்த வீட்டுத் திட்டங்கள் கடன் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டன. முன்னாள் வீடமைப்பு அமைச்சர் செய்த தவறை திருத்தும் வகையில், கடனை இரத்து செய்யும் திருத்தம் ஒன்றை தற்போதைய அமைச்சர் இந்திக்க அநுருத்த மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நாட்டின்

# பல நகரங்களில் காற்று மாசு தீவிரம்



நாட்டின் பல நகரங்களில் காற்று மாசுபடும் வேகம் அதிகரித்துள்ளமையால், காற்றின் தரத்தை அளவிடும் திட்டத்தை விரிவுபடுத்துமாறு, சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சுற்றாடல் வேலைத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

கொழும்பு, கண்டி, குருநாகல், கம்பஹா மற்றும் காலி போன்ற நகரங்களில் காணப்படும் கடுமையான வாகன நெரிசலால் காற்று மாசடைதல் அதிகரித்துள்ளதாக சுற்றாடல் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, எதிர்வரும் ஆண்டில் காற்றின் தரத்தை அளவிடும் திட்டத்தை விரிவுபடுத்தப்படும் எனத் தெரிவித்த அமைச்சர், காற்றின் தரத்தை சரிபார்க்க தேவையான நவீன உபகரணங்களை வாங்குமாறு, மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

காற்றின் தரத்தை பரிசோதிக்கும் போது, அது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கொழும்பில் நெரிசல் மிகுந்த பகுதிகளில் காற்றின் தரத்தை அளவிடும் கருவிகளை நிறுவுவதற்கு மேற்பளக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அண்மையில் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, கொழும்பு, கண்டி, புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் உட்பட தென்னிலங்கை தவிர்ந்த நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்று மாசுபாடு அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகளால் போக்குவரத்துகள் குறைந்திருந்தன. இதனால், காற்று மாசு விகிதமும் குறைந்திருந்தது. எனினும், தற்போது காற்று மாசு வேகமாக அதிகரித்து வருவது கவலை அளிப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இந்தியாவில் காற்று மாசு அதிகமாக உள்ளதால் இலங்கையின் எல்லைப் பகுதிகளில் காற்று மாசு ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.



## சந்திப்பு

அபுதாபியில் நடைபெற்ற 5ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் கலந்துரையாடினர்.

பொருளாதாரத் துறையில் ஒத்துழைப்பு, கலாசாரம் மற்றும் மக்களுக்கிடையிலான முன்முயற்சிகள் மற்றும் பிராந்திய நிறுவனங்களில் கூட்டு முயற்சிகள் ஆகியன தொடர்பில் இதன்போது குறிப்பாக கலந்துரையாடப்பட்டன என வெளிநாட்டு அமைச்சு,அறிவித்துள்ளது.

## 1,000 ரூபாய் விவகார வழக்கு ஒத்திவைப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் அடிப்படை சம்பளம் தொடர்பான வழக்கு, 2022 பெப்ரவரி 24ஆம் திகதி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபாய் அதிகரிக்கப்பட்டவேண்டும் என, வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு எதிராக முதலாளிமார் சம்மேளனத்தால் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று (26) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மேற்படி வழக்கே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு அடுப்பு

## நீர்கொழும்பில் வெடித்தது

எம்.இஸட்.ஷாஜஹான்

நீர்கொழும்பு, தளுபத்தை, கல்கட்டுவ, சமகி மாவத்தை எனும் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று (06) பிற்பகல் 12.45 மணியளவில் வீட்டிலிருந்த எரிவாயு அடுப்பு பாரிய சத்தத்துடன் வெடித்துள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவை அடுத்தே அந்த வீட்டிலிருந்த எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. எனினும், இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

வீட்டு உரிமையாளரின் மனைவி சமையல் செய்து கொண்டிருந்துள்ளார். இடையில் அவர் சமையலறையிலிருந்து குளியலறைக்குச் சென்ற வேளையிலேயே அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது.

இதன் காரணமாக அடுப்பின் மேற்பகுதி சேதத்துக்கு உள்ளாகியுள்ளது. எரிவாயு சிலிண்டருக்கு சேதம் ஏற்படவில்லை.






யாழ். கடலில்

## 7 மூடைகளில் மிதந்த 275 கி.கி கஞ்சா

எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம், மாதகல் கடற்பரப்பில் 7 மூடைகளில் மிதந்த 275 கிலோகிராம் கஞ்சா கடற்படையினரால், நேற்று (06) காலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்தக் கடற்பகுதியில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே, இந்தக் கஞ்சா மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை இந்தியாவில் இருந்து படகு மூலம் கடத்தி வரப்பட்டதாக இருக்கலாம் என்றும், கடற்படையினரைக் கண்டதும் கடத்தல்காரர்கள் அவற்றைக் கடலில் போட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

இவ்வாறு மீட்கப்பட்ட 275 கிலோகிராம் கஞ்சா அடங்கிய 7 மூடைகளும், காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# பவாஸ் படுகொலை; நால்வர் கைது

'வாழைத்தோட்டம் பவாஸ்' என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் வாள்களுடன் நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என ழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

காரொன்றில் நேற்று முன்தினம் இரவு வந்த சிலர், பவாஸைத் துரத்திச்சென்று கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளனர்.

'வாழைத்தோட்டம் பவாஸ்' என்பவர் குற்றச்செயல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு சில காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மற்றும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மதுவரி திணைக்களத்தால்

# 190 பேர் கைது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சி மாவட்டத்தில், கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப் பகுதியில், மாவட்ட மதுவரி திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது, பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 190 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாக, மாவட்ட மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதாவது, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 02 பேரும், கசிப்பு உடைமையில் வைத்திருந்த 34 பேரும், பிறநாட்டு குடி வகைகளை வைத்து இருந்த 03 பேரும், கசிப்பு உற்பத்தி காரணம் வைத்திருந்ததை 03 பேரும், கேடா வைத்திருந்த ஒருவரும், அனுமதிப்பத்திரம் இன்றி கள் விற்பனை செய்தமை மற்றும் உடமையில் வைத்திருந்தமை போன்ற குற்றச்சட்டுகளில் 147 பேரும் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள்

# தொற்று வேகம் தீவிரமாகிறது

■ எம்.எஸ்.எம்.ஹனீபா, எப்.முபாரக்



கிழக்கு மாகாணத்தில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக அதிகரித்து வருவதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று (06) தெரிவிக்கையில், "கிழக்கு மாகாணத்தில் கடந்த ஒக்டோபர் மாதத்தில் குறைவடைந்திருந்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை, கடந்த நவம்பர் மாதத்தில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அத்தோடு, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையாத நிலை தொடர்ந்து காணப்படுகின்றது.

"மாதாந்தம் செய்யப்படும் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனையில் காணப்படும் நோயாளர்களின் சதவீதத்தை ஒப்பீடு செய்யும் போது, மீண்டும் 31 சதவீதமாக தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

"இம்மாத இறுதிக்குள் மேலும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

"சர்வதேச நாடுகள் உட்பட எமது நாட்டிலும் ஒமிக்ரோன் பிரள்வு வகை கொவிட் வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுள்ளது. இது வேகமாக பரவக் கூடியது எனக் கூறப்பட்ட போதிலும் இதன் பாதிப்பு பற்றிய சரியான கணிப்பீடுகள் கூறப்படவில்லை.

"எனவே, பொதுமக்கள் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மிகவும் இறுக்கமாகக் கையாளுவது மிக அவசியமானது. எதிர்வரும் காலங்களில் பண்டிகை மற்றும் விடுமுறை தினங்கள் வருகின்றமையால் தமக்குத் தேவைக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

"சுகாதார விதிமுறைகளை மீறுபவர்களுக்கெதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.





## பரிசில் வழங்கல்

தேசிய லொத்தர் சபையின் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசில் வழங்கும் வைபவம், வடமாகாண ஆளுநரின் வாசஸ்தலத்தில், நேற்று (06) நடைபெற்றது.

மஹஜன சம்பத சீட்டிழுப்பில், ஒருவருக்கு ஒருகோடியே 82 இலட்சம் ரூபாயும் மெகாபவர் வெற்றிச் சீட்டிழுப்பில், ஒருவருக்கு ஒரு கோடி ரூபாயும் அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுக் கூப்பனை வழங்கி வைத்தார். (படப்பிடிப்பு: எஸ். நிதர்ஷன்)



## விபத்தில் இருவர் படுகாயம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில், நேற்று (06) காலை 11 மணியளவில் இடம்பெற்ற விபத்தில், இருவர் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி - வட்டக்கச்சி பகுதியை சேர்ந்த தேனுயன் (வயது 20), பிலங்கர் (வயது 22) ஆகிய இளைஞர்களே, குறித்த விபத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

பூநகரி வீதியில் இருந்து ஏ9 வீதிக்கு பயணித்த மோட்டார் சைக்கிள், ஏ9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்துடன் மோதியுள்ளது. இதன்போது, மோட்டார் சைக்கிளை விலத்த முற்பட்ட டிப்பரின் ஒரு பகுதி, மோட்டார் சைக்கிளின் கான்ரில் பகுதியில் கொழுவி இழுத்து செல்லப்பட்ட நிலையில்,மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணையை, கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



இஸ்லாத்தின் நிழலில்

## மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை

■ நூருல் ஹுதா உமர்

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீட மாணவன் மாளிகைக்காடு தன்ஸீம் றஹ்மத்துல்லாஹ் எழுதிய "இஸ்லாத்தின் நிழலில் மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை" எனும் நூல் வெளியீட்டு விழா, சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய அரங்கில், நேறறு முன்தினம் (05) மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வு, கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில், அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். தௌபீக் (நளீமி)யின் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல், கலாநிதி எஸ்.எம்.ஐயூப், அரசியல் துறைத்தலைவர் பேராசிரியர் எம்.ஏ.எம். பௌஸர், இக்றா நிறுவன பணிப்பாளர் யூ.சத்தார், விரிவுரையாளர் என்.லும்னா ஷாபி உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

**"இஸ்லாத்தின் நிழலில் மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை" எனும் நூலில் நடைமுறைக்கு சாத்தியமான பல்வேறு விடயங்களை விமர்சன ரீதியாக நோக்கப்பட்டிருப்பதுடன், பிரதான 08 தலைப்புக்களை மையமாக வைத்து 68 பக்கங்களைக் கொண்டுள்ளது.**

இந்நூலில் நடைமுறைக்கு சாத்தியமான பல்வேறு விடயங்களை விமர்சன ரீதியாக நோக்கப்பட்டிருப்பதுடன், பிரதான 08 தலைப்புக்களை மையமாக வைத்து 68 பக்கங்களைக் கொண்டுள்ளது.

மலேசியா உயர் ஸ்தானிகருடன்

## முஷாரப் எம்.பி சந்திப்பு

■ நூருல் ஹுதா உமர்

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் மற்றும் மலேசியா நாட்டின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் ஜங் தாய் டன் ஆகியோருக்கும் இடையான சிநேக பூர்வமான சந்திப்பு, மலேசியா உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் நேற்று (06) இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் 65 ஆண்டுகள் பூர்த்தியை நெருங்கும் மலேசியா மற்றும் இலங்கை நட்புறவு தொடர்பான விடயங்கள் பற்றி அளவளாவியதோடு, மலேசிய நாட்டின் உல்லாசப் பயணத்துறை வளர்ச்சி மற்றும் உற்பத்தித் துறை அபிவிருத்தி மற்றும் பெருந்தொற்றுக் காலப்பகுதியில் இரு நாடுகளினதும் பரஸ்பர பொருளாதார முன்னெடுப்புகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

மேலும், கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை வளர்ச்சியில் வெளிநாட்டு முதலீடுகளின் சாத்தியப்பாடுகள் பற்றியும் மலேசியா நாட்டின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர், பாராளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



ஒரு பஸ் நிலையத்துக்கு

## 'இரு தடவைகள் அடிக்கல் நாட்டல்'

■ நடராசா கிருஸ்ணகுமார்

ஒரு கட்டடத்துக்கு, இரு தடவைகள் அடிக்கல் நாட்டுவது அரசியல் நோக்கம் கொண்டதாக அமையும் என, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய உறுப்பினருமான க.தவராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு பஸ் நிலையம் அவசியமானது எனவும் பஸ் நிலையத்தின் கட்டட வேலைகள் முழுமையாக நிறைவு செய்யப்படாமலே திறப்பு விழா நடைபெற்றது எனவும் கூறினார்.

பஸ் நிலையத்தின் மிகுதி வேலைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது எனத் தெரிவித்த அவர், இந்நிலையில் பஸ் நிலையத்தின் மிகுதி வேலைகளுக்கும் தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

"ஒரு கட்டடத்துக்கு, இரு தடவைகள் அடிக்கல் நாட்டுவது என்பது அரசியல் நோக்கம் கொண்டதாக அமையும். மக்களுக்கு தேவை ஒரு சிறந்த பஸ் நிலையம். அதற்காக இரு தடவைகள் அடிக்கல் நாட்டுவதும் அதனை இரு தடவைகள் திறப்பதும் அரசியல் விழாக்களாகவே அமைகின்றன" எனவும் கூறினார்.

தற்போது இரண்டாவது தடவையும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள பஸ் நிலையத்தின் முழுமையான வேலைகள் எப்போது நிறைவடையும் என வினவிய அவர், மக்களுக்கான பேருந்து நிலையம் எப்போது முழுமை பெறும் என்பவை வினாக்குறியாகவே உள்ளன எனவும் தெரிவித்தார்.

காரணம், முல்லைத்தீவு பஸ் நிலையம் பல ஆண்டுகளாக முழுமை பெறாமலே காணப்படுகின்றமை மாவட்டத்தின் போக்குவரத்து துறையில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தி உள்ளது, எனவும் க.தவராசா தெரிவித்தார்.





பொத்துவில் ஆதார வைத்தியசாலையில்

## தோல் நோய் கிளினிக்

■ றியாஸ் ஆதம்



பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் தோல் நோய் சம்பந்தமான கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாதம் ஒரு முறை இக்கிளினிக்கை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், இதில் கலந்துகொண்டு சிகிச்சை பெற விரும்புவோர் வைத்தியசாலைக்கு சமூகமளித்து தங்களது பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டுமென அவ்வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், நேற்று (06) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொத்துவில் மற்றும் அதனை அன்டிய பிரதேச மக்கள் தங்களது தோல் சம்மந்தமான நோய்களுக்கு தூரப் பிரதேச வைத்தியசாலைகளுக்கு சென்றே சிகிச்சைகளைப் பெற்று வந்தனர்.

"இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கினர். இவ்வாறான சந்தப்பத்தில் இப்பிராந்திய மக்களின் நலன் கருதி, பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் தோல் நோய்க் கிளினிக் சேவையை ஆரம்பித்துள்ளோம்.



அட்டாளைச்சேனை

## பட்ஜெட் நிறைவேற்றம்

■ நூருல் ஹுதா உமர், கே.ஏ.ஹமீட்

அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டம் (பட்ஜெட்) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 56ஆவது அமர்வு, தவிசாளருர் ஏ.எல் அமானுல்லா தலைமையில், சபா மண்டபத்தில் நேற்று (06) நடைபெற்றது.

இதன்போது வழமையான சபை நடவடிக்கையை தொடர்ந்து, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளரால் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் சமர்பிக்கப்பட்டது.

**18 உறுப்பினர்களை கொண்ட சபையின் 15 உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டதுடன், வரவு – செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**

தேசிய காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், பொது ஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசிக் கட்சி ஆகிய 4 கட்சிகளை பிரதிநித்துவப்படுத்தும் 18 உறுப்பினர்களை கொண்ட சபையின் 15 உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டதுடன், வரவு - செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு

## ஸ்கேன் இயந்திரம் அன்பளிப்பு

■ எஸ்.நிதர்ஷன்



மக்கள் வங்கியால், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு, 7.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான அல்ரா சவுண்ட் ஸ்கேன் இயந்திரம், அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு, நேற்று (06) காலை 9 மணியளவில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது. மக்கள் வங்கி ஊழியர்களின் பங்களிப்பில், ஏற்கெனவே கொழும்பு போதனா வைத்தியசாலைக்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் இந்த இயந்திரம் வழங்கப்பட்ட நிலையில், நேற்று, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் இந்த இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்தியமூர்த்தி, பிரதிப்பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜா உள்ளிட்ட வைத்தியர்கள், வங்கி அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆற்றில் இறங்கிய ஐவரில்

# மூவர் பலி

## அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

■ ஷேன் செனவிரத்ன

பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிலம்ப நீர்த்தேக்க அணைக்கட்டுக்கு அருகிலுள்ள மகாவலி ஆற்றில் நீராடுவதற்குச் சென்ற ஐவரில் 2 வயது சிறுமி உட்பட மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, பூர்ணாவத்தை, மாபானாவத்துர பசேஜ் பகுதியைச் சேர்ந்த ஐவர் கொண்ட குழுவொன்று, நேற்றுமுன்தினம் (05) மாலை நீராடுவதற்கு வந்திருந்துள்ளனர்.



மகாவலி ஆற்றின் நீர் மட்டம் திடீரென அதிகரித்ததால் ஐவரும் நீரில் மூழ்கியுள்ளதுடன், இதில் இருந்து இருவர் மீட்கப்பட்டு கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கிய முஹமது நாசர் பாத்திமா அஸ்ரா (20) மற்றும் அவரது மகள் பாத்திமா அலியா ஜியா (02) ஆகியோரின் உடல்கள் நேற்று (06) காலை வரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுடன் கடற்படையினரும் பொலிஸாரும் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

நீரில் மூழ்கி உயிரிழந்த மொஹமட் பாரிஸ் மொஹமட் ரஸ்பான் (வயது 20) என்பவரின் சடலம் கம்பளை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# புளியாவத்தையில் எரிவாயு கசிவு மற்றும் வெடிப்பு

■ எஸ்.சதீஸ், எம்.கிருஸ்ணா




புளியாவத்த ஹொன்சி கீழ்ப் பிரிவு தோட்ட பகுதியிலுள்ள இரண்டு வெவ்வேறு குடியிருப்புகளில் எரிவாயு கசிவு மற்றும் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேற்படி பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் குறித்த குடியிருப்பாளர்கள், பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

**“ சம்பவத்தின் போது உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கும் நோர்வூட் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்**

இரண்டு எரிவாயு சிலிண்டர்களும் 15 நாட்களுக்கு முன்பு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் நேற்றுமுன்தினம் இரவு குறித்த சிலிண்டர்களை பாவனைக்கு எடுத்த போதே சம்பவம் இடம்பெற்றதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

எனினும், சம்பவத்தின் போது உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கும் நோர்வூட் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘ரிப்பன்’ அரசியல்வாதியாக நான் இருக்கவேமாட்டேன்

■ எஸ்.சதீஸ்

சமூக மாற்றத்தில் பாடசாலைகளின் பங்களிப்பு இன்றியமையாதது. எனவே, எனது சமூகப் பணியில் பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி வருகிறேன் என தொழிலாளர் தேசிய முன்னணியின் நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் மு.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் சிறுவர் முன்பள்ளிகளுக்கு தொற்று நீக்கி வழங்கி வைக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

ஒஸ்போன் தமிழ் வித்தியாலத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) காலை இடம்பெற்ற இந்நிகழ்வில் கணபதி ,ஒஸ்போன், டங்கல்ட், சமர்வில், கிளவட்டன் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாடசாலைகளில் அரசியல் செய்வதை தவிக்கவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனாலும் சமூக மாற்றத்தில்

பாடசாலைகளின் பங்களிப்பு இன்றியதாதது என்ற வகையில், எனது சமூக பணியில் பாடசாலைகளுக்கு முக்கியத்தும் வழங்கி வருகின்றேன் என்னைப் பொறுத்தவரையில் சமூக சேவை என்பது அரசியல் பிரவேசத்தின் பின்னரானது அல்ல.

ஊடகத்துறையில் கலை, கலாசார,இலக்கியம் மற்றும் கல்வித்துறைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை தொடர்ந்து செய்துவருகிறேன் அதன் பின்னராக பிரதேச சபை உறுப்பிராக தெரிவானதன் பின்னர், பிரதேச சபை உறுப்பினர் என்ற வரையறைக்கு குறுகிய காலத்திற்குள் அதிகளவான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளேன்.

அரசியல்வாதி என்றால் ரிப்பன் வெட்டுவது மட்டும் பணியல்ல மாறாக கலை, கலாசாரம், விளையாட்டு, கல்வி, ஊக்குவிப்பு திட்டங்களை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது நோக்கம்.

அந்த வகையில், கடந்த காலங்களில் வட்டாரத்திலுள்ள சகல முன்பள்ளிகளுக்கும் கற்றல் உபகரணங்களும், பாடசாலைகளுக்கு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தினூடாக மலசலக்கூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன், பிரதேசத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் வாசிகசாலைகளுக்கு நூல்கள் கையளிக்கப்பட்டன. புலமைப்பரிசில் மாணவர்களுக்கு கருத்தரங்குகள், சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இவ்வாறு தொடர்ந்து எனது அரசியல் பணியை முன்னெடுக்கவும் எனது சமூக சேவையை தொடர்ந்து முன்னெடுக்கவும் கல்விச் சமூகத்திடமிருந்து ஆரோக்கியமான விமர்சனங்களை எதிர்பார்கிறேன் என்றார்.









## லயன் வீதி திறந்து வைப்பு...

விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட எல்ல ,கிலலன் தோட்ட இல.7 லயன் வீதி கையக்கும் நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பிரதமரின் இணைப்பதிகாரியுமான செந்தில் தொண்டமானை தோட்ட மக்கள் வரவேற்பதையும் நாடவை வெட்டி வீதியினை திறந்து வைப்பதையும் எல்ல பிரதேச சபை உறுப்பினர் பீ.மாணிக்க ராஜா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டதையும் படங்களில் காணலாம்.



இராகலை தீ விவகாரம்:

# வழக்கு ஒத்திவைப்பு

■ ஆ.ரமேஸ்

ஐந்து உயிர்களைக் காவு கொண்ட இராகலை முதலாம் பிரிவு தீ பரவல் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரின் விளக்கமறியல் உத்தரவை, எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீடித்து, வலப்பனை நீதிமன்ற நீதவான் டி.ஆர். எஸ். ஜினதாச, நேற்று (06) உத்தரவிட்டார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பதுளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சம்பவத்தில் உயிர்தப்பிய தங்கையா இரவீந்திரன் (வயது 27) நீதிமன்றத்தில் ஐந்தாவது முறையாகவும் ஆஜர்படுத்தப்படவில்லை.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சந்தேக நபரை பதுளையிலிருந்து அழைத்து வர முடியாதுள்ளதாக, சிறைச்சாலை அதிகாரிகள் இம்முறையும் நீதவானின் கவனத்துக்கு கொண்டுவந்திருந்தனர்.

இதனையடுத்து, ஸ்கைப் மூலமாக வழக்கு விசாரணையை மேற்கொண்ட நீதவான், 20ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைப்பதாகவும், அன்றைய தினத்தில் சந்தேகநபரை மன்றில் ஆஜர்படுத்தும்படியும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**“ இராகலை நகரில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் தங்கையா இரவீந்திரன், பெற்றோல் வாங்கியுள்ளமை தெரியவந்தது**

இராகலை தோட்டம் முதலாம் பிரிவில் தற்காலிக தனி வீடு ஒன்றில் ஒக்டோபர் 7 ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் தீ பரவியது

ஆறு பேர் வசித்து வந்த வீட்டில் ஒரு வயது மற்றும் 12 வயதுடைய இரு சிறுவர்கள் உட்பட ஐவர் தீயில் கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தனர்.

சம்பவத்தில் இராமையா தங்கையா (வயது 61), அவரின் மனைவி செவனமுத்து லெட்சுமி (வயது 57), ஆகியோருடன், மகளான தங்கையா நதியா (வயது 34) இவரின் பிள்ளைகளான, சத்தியநாதன் துவாரகன் (வயது13), (முதல் கணவரின் பிள்ளை) மற்றும் தற்போதைய தந்தையான மோகன்தாஸ் ஹெரோசன் (வயது 01) ஆகியோரே தீயில் கருகி உயிரிழந்தனர்.

மேற்படி தீ சம்பவத்தில் பெற்றோல் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், இராகலை நகரில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் தங்கையா இரவீந்திரன், பெற்றோல் வாங்கியுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்ததையடுத்து, கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மீள் அபிவிருத்தி செய்யப்பட்ட

# கட்டடத் தொகுதி கையளிப்பு

■ சிவாணி ஸ்ரீ

எஹலியகொடை ஆரம்ப பிரவு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினால், பாடசாலையின் கட்டடத்தொகுதி ஒன்று முழுமையாக மீள் அபிவிருத்தி செய்யப்பட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கையளிக்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.



மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினால் 18 இலட்சம் ரூபாய் செலவில் பாடசாலையின் கட்டடத்தொகுதி முழுமையாக மீள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த பாடசாலையில் 1,500 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 50 ஆசியர்களும் சேவையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் இரத்தினபுரி கல்வி வலயத்தின் பணிப்பாளர் சாந்தி விஜேசிங்க, உதவி பணிப்பாளர் மனோரி குணவர்தன உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# வன்முறைகளை கண்டித்து விழிப்புணர்வு

■ எஸ்.கணேசன்

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து மலையகத்தின் பல பாகங்களில் பல்வேறு விழிப்புணர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் வன்புணர்வுகளை நிறுத்துவோம் எனும்

**“ அரச சார்பற்ற அதிகாரிகள், சிவில் அமைப்பினர், உட்பட புரொடெக்ட் அமைப்பின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பெண்கள், சிறார்கள் என பலரும் கொண்டனர்**

தொனிப்பொருளில் புரொடெக்ட் அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வுகள் நோர்வூட் நகரில் நேற்றுமுன்தினம் (05) இடம்பெற்றன.



பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான புரொடெக்ட் அமைப்பின் தலைவி கருப்பையா மைதிலி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் நோர்வூட் நகரில் வீதி நாடகமும், விழிப்புணர்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அரச சார்பற்ற அதிகாரிகள், சிவில் அமைப்பினர், உட்பட புரொடெக்ட் அமைப்பின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பெண்கள், சிறார்கள் என பலரும் கொண்டனர்.

உடரட்ட மெனிக்கே ரயில் சேவை

# 216 நாட்களுக்குப் பின் ஆரம்பம்

■ பாலித ஆரியவன்ச

கொரோனா தொற்றுநோய் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கொழும்பு கோட்டை - பதுளை இடையேயான உடரட்ட மெனிக்கே ரயில் சேவை, 216 நாட்களுக்குப் பின்னர் நேற்று (06) ஆரம்பமாகியது.

**“ கொழும்பு கோட்டையில் இருந்து ரயில், காலை 8.30க்கு புறப்பட்டது**

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டைக்கு ரயில் காலை 5.45 மணிக்கு பயணம் ஆரம்பத்திருந்தது.

அதேவேளை, கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை பயணிக்கும் ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து காலை 8.30 ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# அகால மரணங்களின் பின்னரான வேதனையைப் புரிந்துகொள்ளுங்கள்

ஒருவர் வீட்டைவிட்டுக் கிளம்பி, வீடு திரும்பும் வரையிலும் அச்சத்துடன் இருந்த காலம் மலையேறிவிட, கொரோனா தொற்றின் பின்னர், எவ்விதமான அச்சமும் இன்றி, வீடுகளுக்குள்ளே முடங்கிக் கிடக்க வேண்டிய நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

வீடுகளில் இளம் பிள்ளைகளைக் கொண்டிருந்த குடும்பத்தினர், தங்களுடைய பிள்ளைகள், வீட்டைவிட்டு வெளியே செல்லவில்லை என நினைத்து பெரும் சந்தோஷமடைந்தனர். எவ்விதமான தீய செயல்களிலும் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்ற அதித்த நம்பிக்கை பெற்றோர்களிடத்தில் இருந்தது.

எனினும், நிகழ்நிலையின் ஊடாக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையால், விலை மதிப்புடைய திறன்பேசிகளை பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுக்கவேண்டிய நிலைமை பெற்றோருக்கு ஏற்பட்டது. அத்துடன், இணைய வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்கவேண்டும்.

பல பெற்றோர்கள், ஒருவாறு வாங்கிகொடுத்தனர், வசதியில்லாதவர்கள் அப்பக்கமே தலையை வைத்துப்படுக்கவில்லை. கிராமங்கள், தோட்டப்புறங்களில் ஒரே வகுப்பில் படிப்பவர்கள் ஒரு குழுவாக கற்றுக்கொண்டனர். பெருந்தோட்டப் பாடசாலைகள் பெரும்பாலனவற்றில் நிகழ்நிலையின் ஊடாக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

அவ்வாறு, வீடுகளுக்குள் முடக்கப்பட்ட மாணவர்களில் பலரும், திறன்பேசியின் ஊடாக சில தேவையற்ற விடயங்களை செய்திருக்கின்றமையை பெற்றோர்களின் கவனத்துக்கு வகுப்பாசிரியர்கள் கொண்டுவந்தும் இருக்கின்றனர். பாடசாலைகள் மீளத் திறக்கப்பட்டமையால், அந்தத் தொகையிலிருந்து பலரும் விலகிநிற்கின்றனர்.

இவ்வாறான நிலையில்தான், ஆறுகள், குளங்கள், கடல்களில் இளம் பிள்ளைகள் மரணிக்கும் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. இரண்டரை வருடங்களுக்கு மேல் வீடுகளுக்குள்ளே இருந்தவர்கள் தங்களுடைய நண்பர்களுடன் ஊர் சுற்றுவதற்காக சென்றே, இவ்வாறான அனர்த்தங்களுக்குள் சிக்கிக்கொள்கின்றனர்.

எங்கு செல்கிறீர்கள், ஏன் செல்கிறீர்கள், யார், யார் வருகின்றனர் என்பது தொடர்பில் பெற்றோர்கள் கேட்கவேண்டும். சீரற்ற வானிலை தொடர்பிலும் அவதானம் செலுத்தவேண்டும். அவ்வாறு செயற்படுவதன் ஊடாகவே அகால மரணங்களைத் தவிர்க்கமுடியும்.

அகால மரணங்களால் ஏற்படும் வலியும், வேதனையும் சொல்லில் அடங்காதவை, ஒரு குழுவில் சென்றவர்கள் இரண்டொருவர் உயிர்தப்பி, இன்னும் சிலர் அகால மரணமாகிவிட்டால், அந்த வேதனையும், சோதனையும் சதா காலமும் நெருடிக்கொண்டே இருக்கும். அந்த வேதனையில் இருந்து மீண்டெழுவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும். அவற்றையெல்லாம் தவர்த்துக்கொள்ள வேண்டுமாயின் " ஆழமறிந்து அதில் இறங்கவேண்டும்".

இதனை நீரில் இறங்குபோது மட்டுமே கருத்தில் கொள்ளாது, ஒவ்வொரு விடயங்களிலும் கடைப்பிடித்தால் பல்வேறான பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். அதேபோல, சீரற்ற வானிலையால், ஆற்றுகளின் அடியில் நீரோட்டம் அதிகரித்து இருக்கும், இறங்கியவுடனே இழுத்துச் சென்றுவிடும். ஆக, நீரின் ஆழத்தை அறியாமல் அதில் காலை விட்டால், நீரினுள் மூழ்க நேரிடும் என்பதனால், கொரோனா முடக்கத்தின் பின்னரான காலங்களில் மிகவும் கவனமாக இருக்கவேண்டியது அவசியம்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




பாகிஸ்தான் சம்பவம் :

# வெட்கமும் துக்கமும்

மொஹமட் பாதுஷா

பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் மிலேச்சத்தனமாக படுகொலை செய்யப்பட்டமையால், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவிலும் அதேபோன்று, இலங்கை முஸ்லிம்களுக்கும் சிங்கள சமூகத்துக்கும் இடையிலான நல்லிணக்கத்திலும் ஓர் எதிர்பாராத தர்மசங்கடமும் நெருக்கடி நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கை முஸ்லிம்கள் மீதான இன, மத நெருக்கடிகள் சற்றுத் தளர்வடையத் தொடங்கும் தருணங்களில், ஏதோ ஒரு திசையில் இருந்து இவ்வாறான ஓர் இக்கட்டான நிலை தோற்றுவிக்கப்படுவது, அண்மைக்காலங்களில் தொடர் நிகழ்வாகி இருக்கின்றது.

'இலங்கையர் ஒருவர் பாகிஸ்தானில் கொலை செய்யப்பட்டுள்ளார்' என்ற செய்திக்கும், 'இலங்கையைச் சேர்ந்த சிங்களவர் ஒருவர் பாகிஸ்தான் வீதியில் வைத்து, முஸ்லிம் கும்பல் ஒன்றினால் சரமாரியாகத் தாக்கப்பட்டு, தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளார்' என்ற செய்திக்கும் வித்தியாசம் இருக்கின்றது.

பிறநாட்டுப் பணியாளர்கள், வெளிநாடுகளில் பணியாற்றும் போது உயிரிழப்பதோ, கொல்லப்படுவதோ புதிய விடயமல்ல. புலம்பெயர்ந்து பணியாற்றுகின்றவர்கள் கூட, இவ்விதமான ஈவிரக்கமற்ற எத்தனையோ குற்றங்களை நிகழ்த்தி இருக்கின்றார்கள். ஆனால், இவை எல்லாவற்றிலும் இருந்து, இந்தக் காட்டுமிராண்டித்தனமான சம்பவம் வேறுபடுகின்றது.

பாகிஸ்தானில் உள்ள தொழிற்சாலை ஒன்றில், முகாமையாளராகப் பணியாற்றி வந்த பிரியந்த குமார என்ற இலங்கையர், அதன் ஊழியர்கள் உள்ளிட்ட காடையரால், வீதியில் வைத்துக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டு, பின்னர் தீயிட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இவர் கொல்லப்பட்டார் என்பதை விடவும், அதனை ஒரு கும்பல் பகிரங்கமாக மேற்கொண்டமையும் அதனை கணிசமானோர் வேடிக்கை பார்த்தமையும் இன்னும் சிலர், செல்பி மற்றும் வீடியோக்களாகப் பதிவு செய்தமையுமே, எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததாக ஆகியிருக்கின்றது.

ஆனால், பாகிஸ்தான் மக்களால் அவர் கொல்லப்படவில்லை. அவர்கள் இதற்கு பகிரங்க கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். அங்கிருந்த சிலர், இந்த வெறியாட்டத்தைத் தடுக்க முயன்றுள்ளனர். அதில், பிரியந்தவின் முஸ்லிம் நண்பரான மலிக் அத்னாணை கௌரவிக்க, அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்து உள்ளமையும் கவனிப்புக்கு உரியது.

பிரியந்த குமார, எவ்வாறு மரணிக்கச் செய்யப்பட்டார் என்பதன் பின்னணியில், தெளிவின்மைகள் உள்ளன. இது குறித்து, இரண்டு கதைகள் சொல்லப்படுகின்றன.

பத்து வருடங்களாகப் பாகிஸ்தானில் பணியாற்றி வரும் பிரியந்தவின் நடவடிக்கையில், அண்மைக்காலமாக மாற்றங்கள் ஏற்பட்டதாகவும், இஸ்லாமிய மார்க்கத்தையும் திருக் குர்ஆனையும் நிந்திப்பவராக அவர் மாறியிருந்தார் என்றும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், தனது தொழிற்சாலையில் ஒட்டப்பட்டிருந்த இஸ்லாமிய மதம்சார் வாசகம் அடங்கிய சுவரொட்டி ஒன்றைக் கிழித்ததை அடுத்தே, அவர் மீது இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஒரு தரப்பால் கூறப்படுகின்றது.

இதேவேளை, பிரியந்த மிகவும் நல்லவர் என்றும் அவர் கிழித்தது இஸ்லாமிய நற்சிந்தனையையோ வாசகத்தையோ அல்ல என்றும், இன்னுமொரு தரப்பால் கூறப்படுகின்றது. அதாவது. அங்குள்ள தீவிரப் போக்குள்ள ஒரு கட்சியின் சுவரொட்டியையே அவர் கிழித்ததாகவும் அதிலேயே மத வாசகம் உள்ளடங்கி இருந்ததாகவும் வேறு சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால், இதில் எது உண்மை என்பது ஊர்ஜிதம் இல்லை. இலங்கையில் நடக்கின்ற வன்முறைகளின் பின்புலத்தையே நம்மால் வருடக் கணக்கான துல்லியமாக அறிந்து கொள்ள முடியாதிருக்கின்ற சூழலில், பாகிஸ்தானில் நடந்த சம்பவத்தின் உண்மைத் தகவல்கள் நமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை.

இதையெல்லாம் கடந்து, அங்கு என்ன நடந்திருக்கலாம் என்பதையும், இவ்விவகாரம் எவ்வாறு கையாளப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அலசுவது, பல்லினச் சமூகங்களுடன் வாழும் நமக்கு அவசியமானதாகும்.

212 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட பாகிஸ்தானில் முஸ்லிம்கள் 96 சதவீதம் வாழ்கின்றார்கள். இந்துக்கள் இரண்டு சதவீதமும் கிறிஸ்தவர்கள் ஒரு சதவீதமும் வாழ்கின்றார்கள். மிக அதிக சனத்தொகையைக் கொண்ட முஸ்லிம் நாடுகளில் ஒன்றாக, பாகிஸ்தான் இருக்கின்றது. எனவே, அந்த நாட்டு மக்கள் எந்தளவுக்கு மார்க்க விடயத்தில் தனிக்காட்டு ராஜாக்கள் போல இருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இது தவிர, பாகிஸ்தானில் ஆயிரத்தெட்டு மார்க்கம்சார் இயக்கங்களும் பிரிவுகளும் உள்ளன. அத்துடன் தீவிர போக்குள்ள அரசியல் கட்சிகள், அமைப்புகள் பெருவளர்ச்சி கண்டிருப்பதுடன், தீவிரவாத இயக்கங்களின் கூடாரமாகவும் பாகிஸ்தான் உலக நாடுகளால் நோக்கப்படுகின்றது.

இம்ரான் கான் பிரதமரான பிறகு, ஒரு முற்போக்கு அரசியல் கலாசாரம் உருவாகியிருந்தாலும், பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆகவே, இந்தப் பின்னணியில், பாகிஸ்தானில் வசிப்பது என்பது, அதுவும் மாற்றுமதத்தைச் சேர்ந்த ஒருவர் வாழ்வது என்பது, 'கத்தியின் மேல் நடப்பது' போன்றதாகும்.

பல்லின நாடான இலங்கையில் இருந்து தொழிலுக்காகச் சென்றவர், அதுவும் முகாமையாளராகப் பதவியில் இருந்தவர் என்ற அடிப்படையில், பிரியந்த இந்த விடயங்களை எல்லாம் அறியாதவராக இருந்திருக்க மாட்டார்; அறியாது இருந்திருக்கவும் முடியாது. 10 வருடங்களில் அவர் பணிபுரிந்த சூழலும் அவரது சக பணியாளர்களும் அவருக்கு நிறைய யதார்த்தங்களைக் கற்றுக் கொடுத்திருப்பர்.

பாகிஸ்தான் மக்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்களது சமய பழக்க வழக்கங்கள், உணர்வுத்தூண்டல் எப்பேர்ப்பட்டது என்பது பற்றியெல்லாம் பெருமளவுக்கு அறிந்து வைத்திருப்பார். அவ்வாறுதான் இலட்சக்கணக்கான இலங்கைப் பணியாளர்கள் அரபு, ஐரோப்பிய நாடுகளில் பணியாற்றுகின்றனர்.

இந்தக் கோணத்தில் நோக்கும் போது, இஸ்லாமிய வாசகங்களைப் பிரியந்த கிழித்ததாகக் கூறப்படுவது, உண்மைதானா என்பதை இரண்டு முறை சிந்திக்க வேண்டிள்ளது. உண்மையில், அது ஓர் அரசியல் கட்சியின் சுவரொட்டியாக இருந்திருந்தால், முறையாக அதனை அகற்றும் அதிகாரம், முகாமையாளராக அவருக்கு இருந்தது என்பதையும் மறுக்க முடியாது.

ஆனால், அவர் தீவிரமாக இஸ்லாத்தை விமர்சிப்பவராக இருந்தார் என்று ஒரு விளக்கம் கூறப்படுகின்றது. இதனை அடிப்படையாக வைத்து, கருத்து வெளியிடுகின்ற சமூக வலைத்தள பதிவாளர்கள், தொழில்புரியும் இடத்தில் அங்குள்ள மார்க்கத்தை மதிப்பதன் அவசியத்தை வலியுறுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

இவற்றில் உண்மை எதுவென்பது நமக்குத் தெரியாது. கடைசி மட்டும் அது தெரியவரப் போவதும் இல்லை. எது எவ்வாறாயினும், இந்தப் படுகொலையை எந்த நியாயங்களின் அடிப்படையிலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

இந்தச் சம்பவம் மிகவும் மிலேச்சத்தனமானதும், காட்டுமிராண்டித்தனமானதும் ஆகும். அவர் ஒருவேளை மார்க்கத்தை நிந்தித்தால் கூட, அவருக்கு அழகிய முறையில் அதற்கான விளக்கத்தை சொல்லிக் கொடுக்கச் சொல்லியே இஸ்லாம் அறிவுரை கூறியுள்ளது.

எனவே, இதனை இலங்கை முஸ்லிம்கள் உட்பட உலகெங்கும் வாழ்கின்ற முஸ்லிம்கள் கடுமையாகக் கண்டித்துள்ளனர். ஏன், பாகிஸ்தானில் கூட பல நூற்றுக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்பும் கவலையும் வெளியிட்டுள்ளமை கவனிப்புக்குரியது. எல்லா நாடுகளிலும் இவ்வாறான ஒரு குழப்பக்காரக் கும்பல் இருக்கின்றது.

வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரின் நடவடிக்கைகள் சகிப்புத்தன்மை அற்றதாக இருக்கின்றது என்றால், அவரை நாடு கடத்தியிருக்கலாம்; பொலிஸில் ஒப்படைத்திருக்கலாம். அதைவிடுத்து, மிலேச்சத்தனமாக வீதியில் வைத்து கும்பலாகத் தாக்குதல் நடத்தி, சாகடித்தமை மனிதகுல நாகரிகத்தை குழிதோண்டிப் புதைத்துள்ளது.

அத்துடன், இஸ்லாமிய சமயம் பற்றிய ஒரு தவறான தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இருக்கின்றது. ஏற்கெனவே முஸ்லிம்கள் பயங்கரவாதிகள், அடிப்படைவாதிகள் என்று பிரசாரம் செய்து வரும் தரப்புகளுக்கு, இது 'வாய்க்கு அவலாக' ஆகியிருக்கின்றது.

இந்தப் பின்னணியிலேயே, பாகிஸ்தானின் பிரதமரான இம்ரான் கான், இதனை "பாகிஸ்தானின் வெட்ககரமான நாள்" எனக் கூறியுள்ளார்.

ஆனால், இந்தச் சம்பவத்தால் அதிகம் பாதிக்கப்பட்டது பிரியந்தவின் குடும்பம் என்பது போல, இதையடுத்து அதிக மனஉளைச்சலுக்கு உள்ளாகியுள்ளது இலங்கை முஸ்லிம் சமூகமாகும்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் ஏற்படும் நெருக்கடியை விட, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சிங்கள -முஸ்லிம் உறவில் கூரிய நகங்களால் கீறல்கள் விழுந்து விடுமோ என்ற அச்சம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பிரியந்தவின் உடல் இலங்கைக்கு கொண்டு வரப்படுகின்ற நிலையில், இந்தப் படுகொலையைக் காரணமாக வைத்து, இனவாதிகள் ஏதேனும் வன்முறைகளைத் தூண்டிவிட்டு, நம்மைப் பழிவாங்குவார்களோ, நம்மீது வெறுப்பை உமிழ்வார்களோ என்ற கவலையும் முஸ்லிம்களுக்குத் தொற்றிக் கொண்டுள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள்,ஈ ஆசைகள் அற்றவர்கள்; பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள். உண்மையான கொடையாளிகள்.

ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்த்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது.

தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது; இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை.

வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. எதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா? அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கல்முனை சிறுவர் பூங்கா சென்றால்

## வைத்தியசாலையை நாட வேண்டிய நிலையா?

கல்முனை மாநகர எல்லையில் கடற்கரையை அண்டிய பகுதியில் அமையப்பெற்றிருக்கும் சிறுவர் பூங்கா, ஒழுங்காகப் பராமரிக்கப்படாத நிலையில் அத்தனையும் உப்புக்காற்றுக்கு இரையாகித் துருப்பிடித்திருக்கிறது. பூங்காவில் உள்ள ஊஞ்சல்கள், அறுந்து விழும் நிலையில் உள்ளன. விடுமுறை காலப்பகுதியாகையால் ஆசையோடு பொழுதைக் கழிக்க வரும் பிள்ளைகள், அனர்த்தங்களை எதிர்கொண்டு வைத்தியசாலையை நாட நேரிடும் நிலையுள்ளது.

கோடிகள் கொடுத்துக் கொள்வனவு செய்யப்பட்டு, சுமார் ஐந்து வருட குறுகிய காலம் கூடப் பயன்படுத்தாத நிலையில் இருக்கும் இந்த உபகரணங்கள் உடைந்து, இரும்புக்கும் எடுக்க முடியாத நிலையில் இருக்க காரணம் பாராமரிப்பு அற்றிருப்பதுமாகும்.

இறப்பர் மெத்தைகளோடு அமையப்பெறவேண்டிய உபகரணங்கள், இது வரைகாலமும் இறப்பர் மெத்தைகளே இல்லாமல் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதோடு ஆபத்தான சூழலிலேயே சிறுவர்கள் விளையாடி வந்திருக்கின்றனர். ஆனால், தெய்வாதீனமாக எந்த அசம்பாவிதங்களும் இன்றுவரை பெரியளவில் பதிவாகியிருக்கவில்லை. இருந்தாலும் பாரிய அனர்த்தம் வர முன்னர், இந்த பூங்காக்களை பாவனைக்கு உகந்ததாக மாற்றியமைக்க வேண்டிய தேவை உள்ளது.

எனவே, பொருத்தமான பாதுகாப்பு வசதிகளை செய்து பாராமரித்துத்தர முன்வர வேண்டும் என்று பிரதேச பொதுமக்கள், கல்முனை மாநகர சபை நிர்வாகத்தை கேட்டுக் கொள்கின்றனர்.

நூருல் ஹுதா உமர்

விமான நிலையத்தில்

# சிக்கினார் ஜெக்குலின்

200 கோடி இந்திய ரூபாய் மோசடி வழக்கு தொடர்பாக, இலங்கையை சேர்ந்த பொலிவுட் நடிகை ஜெக்குலின் ஃபெர்னான்டஸ் மும்பை விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டார்.



மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சுகேஷ் சந்திரசேகரோடு தொடர்புடையதாக, ஏற்கெனவே ஜெக்குலின் ஃபெர்னான்டஸுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மஸ்கட் செல்வதற்காக மும்பை விமான நிலையத்திற்கு ஜெக்குலின் ஃபெர்னான்டஸ் நேற்று(06) சென்றிருந்தார். அங்கு அவரை அமலாக்கத்துறையினர் அதிரடியாக தடுத்து நிறுத்தி விசாரணை மேற்கொண்டனர்.

அதைத் தொடர்ந்து, அவரை டெல்லிக்கு அழைத்துச் சென்று அடுத்தக்கட்ட விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சுகேஷ் சந்திரசேகர் மற்றும் ஜெக்குலின் ஃபெர்னான்டஸ் இடையே பணப்பரிவர்த்தனை நடந்தது தொடர்பான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஷிவானி வீட்டுக்கு புதுவரவு

பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஷிவானி நாராயணன் சிங்கப்பெண்ணாக வெளியேறினார். பிக்பாஸ் நிகழ்ச்சிக்கு பின்னர் அவருக்கு திரைப்பட வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் சமூக வலைதளங்களில் குறிப்பாக இன்ஸ்டாகிராமில் ஷிவானி நாராயணன் பல புகைப்படங்களை பதிவு செய்து வருவார். இந்த நிலையில், அவர் தனது வீட்டுக்கு புதிய உறுப்பினர் ஒருவர் வந்திருப்பதாக அறிவித்துள்ளார்.

அதுதான் அவர் புதிதாக வளர்க்க இருக்கும் செல்ல நாய் குட்டி. ஏற்கெனவே அவர் இரண்டு நாய்க் குட்டிகளை வளர்த்து வரும் நிலையில் தற்போது புதிய நாய்க்குட்டி ஒன்று வாங்கி வளர்க்க உள்ளார்.

அதை கையில் தூக்கி வைத்துக்கொண்டு காட்டும் புகைப்படங்களை அவர் பதிவு செய்துள்ள நிலையில் இந்த புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.



# வடிவேலுவை சந்தித்த பிக்பாஸ் மதுமிதா



பிக்பாஸ் சீசன் 5 நிகழ்ச்சியில் ஜெர்மனியை சேர்ந்த தமிழ் பெண் மதுமிதா பங்கேற்றிருந்தார். இந்த நிலையில் பிரபல பாடகி தீயுடன் வைகைப்புயல் வடிவேலுவை பிக்பாஸ் மதுமிதா சந்தித்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.

வடிவேலு நடித்து வரும் 'நாய் சேகர்' என்ற திரைப்படத்துக்கு பாடகி தீயின் தந்தை சந்தோஷ் நாராயணன் தான் இசையமைத்து வருகிறார்.

இந்த நிலையில் பாடகி தீயுடன் மதுமிதா வடிவேலுவை சந்தித்து இருப்பதால் மதுமிதா இந்தத் திரைப்படத்தில் நடிக்கிறாரா? அல்லது பாடல் பாடப் போகிறாரா? போன்ற கேள்விகளை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.



இந்தியாவுக்கு வரவுள்ள

# 'மணி ஹெய்ஸ்ட்' குழுவினர்

உலகம் முழுவதும் பெரும்பாலானவர்களால் விருப்பத்துடன் பார்க்கப்படும் 'மணி ஹெய்ஸ்ட்' என்ற வெப் தொடரின் ஐந்தாவது சீசனின் இரண்டாம் பாகம் அண்மையில் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

உலகம் முழுவதும் இந்த தொடர் சூப்பர் ஹிட் வெற்றி பெற்றாலும் இந்தியாவில் தான் மிக அதிக பார்வையாளர்கள் இத்தொடருக்கு உள்ளனர்.

இதனை அடுத்து இந்தியாவுக்கும் இந்திய ரசிகர்களுக்கும் நன்றி கூறிய 'மணி ஹெய்ஸ்ட்' குழுவினர் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த வீடியோவில் இந்த தொடரின் முக்கிய கேரக்டரில் நடித்த ஹெலன்ஸ்கி, 'கொரோனா கட்டுப்பாடுகள் முடிந்தவுடன் நான் இந்தியாவுக்கு வருகிறேன். குறிப்பாக கோவாவுக்கு வர வேண்டும் என்று எனக்கு ஆசை'என்றும் தெரிவித்தார்.

# "நான் துணிச்சலான பெண்"



காதல் கொண்டேன் திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் சோனியா அகர்வால். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர். இப்போது 'கிராண்ட்மா' என்ற திரைப்படத்தில் நடித்து முடித்திருக்கிறார்.

இந்த திரைப்படத்தின் டிரெய்லர் வெளியீட்டு விழாவில் நடிகை சோனியா அகர்வால் கலந்து கொண்டு பேசியதாவது:-

இந்தத் திரைப்படத்தில் நான் ஆசிரியை வேடத்தில் நடித்திருக்கிறேன். பல திரைப்படங்களில் நான் சாதுவான பெண்ணாகவே நடித்து உள்ளேன். இயல்பாக நான் மிகமிக துணிச்சலான பெண். நேரில் பார்த்தால் அப்படி தெரியாது.

ஒரு ஊரில் இருந்து இன்னொரு ஊருக்கு காரில் தனியாகவே பயணம் செய்திருக்கிறேன். காரை நானே ஓட்டுவேன். யாருக்கும் பயப்படமாட்டேன். நான் பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது என்னைக் கேலி செய்த ஒரு மாணவனை கன்னத்தில் அறைந்து நான் துணிச்சலான பெண் என்பதை நிரூபித்தேன்.

எனக்கு இசையில் ஆர்வம் உண்டு என்றாலும், சொந்த குரலில் பாடி நடிக்கவில்லை. அடுத்து ஒரு திரைப்படத்தில் பாடகியாக நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்றார்.



நாகலாந்து

கொலைக்கு அனுமதியா?

# நாகலாந்து விவகாரம் பற்றி எம்.பிக்கள் கேள்வி

நாகலாந்து மாநில துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் அப்பாவி மக்கள் 17 பேர் கொல்லப்பட்டதும், அதற்கு பதிலடியாக பொதுமக்கள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்பு படை வீரர் ஒருவர் உயிரிழந்த விவகாரமும் நாடு முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.



நேற்றைய பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரிலும் நாகலாந்து விவகாரம் எதிரொலித்துள்ளது.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய எம்.பி.க்கள் இதுபோன்ற காட்டுமிராண்டித் தனமான சட்டங்கள் உலகில் எந்த நாட்டிலும் இல்லை. கொலை செய்வதற்கு அரசே சட்டபூர்வ அனுமதி கொடுத்துள்ளதா? என்று கடுமையாக கேள்வி எழுப்பினார்.

காங்கிரஸ் எம்.பிக்கள் கவுரவ் கோகோய், மாணிக்கம் தாகூர், ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சி எம்.பி மனோஜ் குமார் ஜா ஆகியோர் ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டு வந்தனர்.

பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைக்கு கோகோய் கடும் கண்டனம் தெரிவித்தனர். நெஞ்சை உலுக்கும் நிகழ்வு என மாணிக்கம் தாகூர் குறிப்பிட்டார். மாநிலங்களவையில் காங்கிரஸ் எம்.பி மல்லிகார்ஜுன கார்கே நாகலாந்து விவகாரத்தை எழுப்பினார்.


இந்த விஷயத்தில் பிரதமர் மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் பாராளுமன்றத்தில் உரிய விளக்கம் தர வேண்டுமென கார்கே கோரிக்கை விடுத்தார்.

ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் எம்.பி பி.வி மிதுன் ரெட்டி கூறுகையில், நாகாலாந்து மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

விரைவில் அங்கு அமைதி திரும்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பகுஜன் சமாஜ்வாதி கட்சி எம்.பி ரிதேஷ் பாண்டே பேசுகையில், நாகலாந்து விவகாரத்தில் விரைவான விசாரணை தேவை. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடும், அரசு வேலையும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஜெய்ப்பூர்

# காங்கிரஸின் உட்கட்சி பூசலால் ராஜஸ்தான் அரசு கவிழும்



காங்கிரஸில் நிலவும் உட்கட்சி பூசல் காரணமாகவே ராஜஸ்தான் அரசு கவிழும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் ஆட்சியை கவிழ்க்க பாரதிய ஜனதா (பா.ஜ) முயற்சிப்பதாக முதல்வர் கெலாட் கூறுகிறார் என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா மறுப்புதெரிவித்துள்ளார்.

மக்கள் ஆதரவு தங்களுக்கு உள்ளது என காங்கிரஸ் கருதினால் சட்டசபையை கலைத்துவிட்டு முன் கூட்டியே தேர்தல் நடத்த வேண்டும், என்றும் அவர் கூறினார்.

ராஜஸ்தான் ஜெயப்பூரில் நடந்த பா.ஜ. தொண்டர்கள் கூட்டத்தில் அமித் ஷா பேசியதாவது:

ராஜஸ்தான் அரசை கவிழ்க்க நாங்கள் ஒரு போதும் முயற்சிக்கவில்லை. ராஜஸ்தானை ஆளும் காங்கிரஸ், எந்த நேரத்தில் ஆட்சி கவிழுமோ என்ற அச்சத்தில் உள்ளது. இதற்கு காங்கிரஸில் நிலவும் உட்கட்சி பூசல் தான் காரணம். ஆனால் ஆட்சியை கவிழ்க்க பா.ஜ. முயற்சிப்பதாக முதல்வர் கெலாட் கூறுகிறார்.

ராஜஸ்தான் அரசை கவிழ்க்கும் எண்ணம் பா.ஜ.,வுக்கு எப்போதும் இல்லை. என்றார்

காஷ்மீர்

# புராதன துர்க்கை சிலை மீட்பு

ஜம்மு காஷ்மீர் மாநிலம் புட்காம் மாவட்டத்தில் பழைமையான துர்கா தேவி சிலை உள்ளூர் பொலிஸாரால் சில தினங்களுக்கு முன் மீட்கப்பட்டது.

இதேவேளை முன்னதாக கடந்த ஒக்டோபர் இறுதியிலும் கருங்கல்லால் செதுக்கப்பட்ட துர்கா தேவியின் சிலையொன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த சிலைகள் 1,300 ஆண்டுகள் பழைமையானவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிங்க சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் துர்க்கை சிலையை ஆய்வு செய்வதற்காக ஜம்மு காஷ்மீர் காப்பகங்கள், தொல்லியல் துறை மற்றும் அருங்காட்சியகங்களின் அதிகாரிகள் குழுவை பொலிஸார் வரவழைத்தனர். ஆய்வுக்கு பிறகே இந்த துர்கா தேவியின் சிலை கி.பி. 7ஆம் நூற்றாண்டு அல்லது சுமார் 1,300 ஆண்டுகளுக்கு முந்தைய சிலையாக இருக்கலாம் என்று அந்த குழு தெரிவித்ததாக பொலிஸ் தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை

# அ.ம.மு.க.வுக்கு சாதகமாக பொலிஸ் துணை போகிறது

## அ.தி.மு.க. கவலை

அண்ணா மறுமலர்ச்சி முன்னேற்ற கழகத்துக்கு (அ.ம.மு.க) சாதகமாக பொலிஸ், துணைபோவதாக அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கவலை தெரிவித்தார். முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஐந்தாவது நினைவு தினத்தை முன்னிட்டு, அ.தி.மு.க.வினர் பெரம்பூர் பாரதி சாலையில் அன்னதானம் வழங்கினர்.

இதில் பங்கேற்றபோதே முன்னாள் அமைச்சர் ஜெயகுமார் மேற்கண்டவாறு கூறினார். ஜெயலலிதா நினைவிடத்திற்கு, முறையாக அனுமதி பெற்றே சென்றோம். ஆனால், நாங்கள் வெளியே வருவதற்குள், அ.ம.மு.க.வினரை பொலிஸார் உள்ளே விட்டனர். என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்தியா

ஒமிக்ரானை கட்டுப்படுத்த

# கண்காணிப்பு தீவிரம்

ஒமிக்ரான் பரவலை கட்டுப்படுத்த விமான நிலையங்களில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ஒமிக்ரான் குறித்து பதற்றப்பட வேண்டாம். ஆனால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒமிக்ரான் என்ன மாதிரியான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை உறுதி செய்ய இன்னும் சில வாரங்கள் ஆகும் என்று பிரபல மருத்துவர் சௌமித்ரா தாஸ் தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரான் வைரஸ், தென்னாபிரிக்காவில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அதிக எண்ணிக்கையில் பாதிப்பதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். அதேநேரம் தென்னாபிரிக்காவை போல், இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒமிக்ரானால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை

# தி.மு.க.வின் வாரிசு அரசியல்

மும்முரம் அடையும் நிலை

திராவிட முன்னேற்ற கழகத்தின் (தி.மு.க) வின் வாரிசு அரசியல் மும்முரம் அடையும் நிலையை எட்டிவருகிறது. ஸ்டாலின் வீட்டில் மற்றோர் அரசியல் வாரிசும் உருவாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஸ்டாலின் முதலமைச்சராக உள்ள நிலையில் உதயநிதிக்கு அமைச்சர் பதவி கொடுக்க வேண்டும் என்ற குரல்கள் கேட்கத் தொடங்கிவிட்டன.

கட்சிக்குள்ளும், வீட்டுக்குள்ளும் இந்த கோரிக்கைகள் ஸ்டாலின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வருகின்றன. இந்நிலையில் உதயநிதியின் மனைவி கிருத்திகாவையும் அரசியலுக்கு இழுக்க முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

வாரிசு அரசியல் தொடர்வதற்கும் மும்முரமடைவதற்கும் முக்கிய காரணமாக இருப்பவர்கள் ஆதரவாளர்கள்தான் என்பதும் இதிலிருந்து தெரிகிறது.

திருவல்லிக்கேணி தொகுதியில் வெற்றி பெற்ற உதயநிதிக்கு அமைச்சர் பொறுப்பு ஏதும் வழங்கப்படவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மியான்மார்

# சூ கிக்கு சிறை தண்டனை

பதவியிலிருந்து அகற்றப்பட்ட மியான்மார் தலைவர் ஆங் சான் சூ கிக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஒன்று சட்டரீதியற்ற செயற்பாடுகளுக்கு தூண்டியமை, கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டுகளில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனைத் தீர்ப்பு ஒன்றை வழங்கியுள்ளதாக இவ்வழக்கைத் தொடரும் தகவல் மூலம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, மியான்மாரின் ஜனாதிபதி வின் மின்டுக்கும் நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பெயர் குறிப்பிட விரும்பாத குறித்த தகவல்மூலம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிப்பதற்கான அழைப்புகளுக்கு இராணுவப் பேச்சாளர் ஒருவர் பதிலளிக்கவில்லை என்பதுடன், சூ கி எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவல்களை இராணுவம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



பல மோசடிக் குற்றச்சாட்டுகள், அரச இரகசியச் சட்டங்களை, தொலைத் தொடர்புச் சட்டங்களை மீறியமை உள்ளிட்ட 12 வழக்குகளை சூ கி எதிர்கொள்கின்ற நிலையில், இதற்கான அதிகபட்ச சிறைத்தண்டனை 100 ஆண்டுகளுக்கும் மேலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



மியான்மார்

யங்கூனில்

## ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவ ட்ரக் மோதியது

மியான்மாரின் வர்த்தக் தலைநகரான யங்கூனில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இராணுவ ட்ரக் ஒன்று மோதியதை அடுத்து சிலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, ஓடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இச்சம்பவத்தின் பின்னர் படைவீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், ஏனையோரை அடித்ததாகவும் சம்பவத்தைக் கண்ணுற்றோர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், 11 பேரைக் கைது செய்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது. கவலைக்கிடமாக உள்ள ஒருவர் உட்பட மூன்று பேர் காயமடைந்துள்ளனர். அந்தவகையில், ட்ரக் மோதியதா என உறுதிப்படுத்தியிருக்காத இராணுவம், கலகத்தை மேற்கொண்ட சனத்திரளைக் கலைத்ததாகக் கூறியுள்ளது.



இஸ்ரேல்

உணவுத்தவிர்ப்பை முடித்த சில வாரங்களில்

## முன்னாள் கைதியை விடுவித்த இஸ்ரேல்

பிரபலமானதொரு பலஸ்தீனக் கைதியொருவரை இஸ்ரேலிய அதிகாரிகள் விடுவித்துள்ளதாக பலஸ்தீனக் கைதிகள் கழகம் தெரிவித்துள்ளது.

131 நாள்கள் உணவுத் தவிர்ப்பை முடிவுக்கு கொண்டு வந்த ஒப்பந்தம் ஒன்றின் இரண்டு வாரங்களை அடுத்தே 32 வயதான கயேட் பஸ்பௌஸ் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 23ஆம் திகதி உணவுத் தவிர்ப்பை முடித்த பின்னர் இஸ்ரேலிய வைத்தியசாலை ஒன்றிலேயே பஸ்பௌஸ் காணப்பட்டிருந்தார்.

குற்றச்சாட்டில்லாமல் முடிவின்றி தடுத்து வைக்கப்படுவதற்கு எதிராகவே பஸ்பௌஸ் உணவுத் தவிர்ப்பை மேற்கொண்டிருந்தார்.

இந்தோனேஷியா

கிராமங்கள் சாம்பலால் மூடப்பட்ட நிலையில்

## தப்பித்தோரை மீட்புப் பணியாளர்கள் தேடுகின்றனர்

இந்தோனேஷியாவின் ஜாவாத் தீவிலுள்ள செமுரு எரிமலை கடந்த சனிக்கிழமை வெடித்தமையடுத்து கிராமங்கள் சுடு சாம்பலால் மூடப்பட்ட நிலையில் தப்பித்தவர்களை மீட்புப் பணியாளர்கள் தேடி வருகின்றனர்.

14 பேர் இறந்ததாக நம்பப்படுவதாக அவசர சேவைகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், வெறும் கைகளாலேயே பொலிஸாரும், இராணுவத்தினரும் சடலங்களைத் தேடி வருகின்றனர். கூரைகளுடன் வீடுகள் மூடப்பட்டதுடன், வாகனங்களும் முழுமையாக மூடப்பட்டுள்ளன.

11 கிராமங்கள் எரிமலைச் சாம்பலால் சூழப்பட்டுள்ளதுடன், 56 பேர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில், சம்பவப் பகுதியிலிருந்து 1,300 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.






ஐ. அமெரிக்கா

## ஒமிக்ரான் மாறியில் குளிர் வைரஸின் மரபணு

கொரோனா வைரஸை ஏற்படுத்துகின்ற ஒமிக்ரான் மாறியானது பொதுவான குளிரை ஏற்படுத்துகின்ற வைரஸின் மரபணு மாதிரியையும் எடுத்துக் கொண்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில், மனிதனின் நோயெதிர்ப்புக் கட்டமைப்பின் தாக்குதலிலிருந்து ஒமிக்ரோன் மாறி தப்ப இது உதவுவதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆக, குறைவான அல்லது குணங்குறிகள் அல்லாததுடன் ஒமிக்ரான் மாறியானது பரவும் என்பது குறிப்பிடத்தக்கது.

சாண்டியாகோ

## சிலியில் புதிய டைனோசர்

### 7.5 கோடி ஆண்டுகளுக்கு முந்தையது

சிலி நாட்டைச் சேர்ந்த பழங்கால உயிரினங்கள் குறித்த ஆய்வாளர்கள் ஏழரை கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த டைனோசரின் எலும்பு கூட்டில் 80 சதவீதத்தை கண்டுபிடித்துள்ளதாக அறிக்கை சமர்பித்துள்ளனர்.

சிலியில் சாண்டியாகோவிற்கு தெற்கே மூவாயிரம் தொலைவில் லாஸ் சைனாஸ் பள்ளத்தாக்கில் செர்ரோ கீதோ எனும் பகுதி உள்ளது. இங்கு 15 கிலோமீட்டர் நீளத்திற்கு பல்வேறு பாறைகள், புதைப்படிவங்கள் உள்ளன. அகழ்வாராய்ச்சி தளமாக உள்ளது.

இங்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது டைனோசரின் எச்சங்கள்



கண்டெடுக்கப்பட்டன. அதனை பழங்கால உயிரினங்கள் குறித்த ஆய்வாளர்கள் ஆராய்ந்து வந்தனர். அது குறித்த அறிக்கையை சிலி பல்கலைக்கழகத்தில் தற்போது விளக்கியுள்ளனர்.

அதில் கூறப்பட்டிருப்பதாவது: 7.1 முதல் 7.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர்கள் அந்த பகுதியில் வாழ்ந்ததாக மதிப்பிடுகின்றோம். 7 அடி நீளமும், 150 கிலோ கிராம் நிறையைக் கொண்ட ஒரு தாவர உண்ணி இது. ஏற்கெனவே அறியப்பட்ட டைனோசர் இனத்தை ஆராய்வதாக நம்பினோம்.

ஆனால் அதன் வாலை ஆராய்ந்த போது தான் இது புதிய இனம் என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டோம். இதன் வால் ஏழு ஜோடி ஆஸ்டியோடெர்ம்களால் (தோல் அடுக்குகளில் அமைந்துள்ள எலும்புத் தகடுகள்) மூடப்பட்டிருந்தது. பெரணி தாவரம் போன்ற அதன் மூலம் நமக்குத் தெரிந்த டைனோசர்களிலிருந்து மாறுபட்ட ஆயுதத்தை இது உருவாக்குகிறது. என கூறியுள்ளனர்.




நியூசிலாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது இந்தியா

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், மும்பையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியில் வென்றதன் மூலம் 1-0 என தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, மாயங்க் அகர்வாலின் 150, அக்ஸர் பட்டேலின் 52, ஷுப்மன் கில்லின் 44, ரித்திமான் சஹாவின் 27 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 325 ஓட்டங்களை பெற்றது. பந்துவீச்சில், 10 விக்கெட்டுகளையும் அஜாஸ் பட்டேல் கைப்பற்றியிருந்தார்.

இந்நிலையில், பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, மொஹமட் சிராஜ் (3), அக்ஸர் பட்டேல் (2), இரவிச்சந்திரன் அஷ்வின் (4), ஜெயந்த் யாதவ்விடம் (1) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

இதையடுத்து தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, மாயங்க் அகர்வாலின் 62, செட்டேஸ்வர் புஜாராவின் 47, ஷுப்மன் கில்லின் 47, அக்ஸர் பட்டேலின் ஆட்டமிழக்காத 41, அணித்தலைவர் விராட் கோலியின் 36 ஓட்டங்களோடு 7 விக்கெட்டுகளை இழந்து 276 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இனிங்ஸை இடைநிறுத்தியது. பந்துவீச்சில், பட்டேல் 4, றஷின் றவீந்திரா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், 540 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, இரவிச்சந்திரன் அஷ்வின் (4), ஜெயந்த் யாதவ் (4), அக்ஸர் பட்டேலிடம் (1) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து, சகல விக்கெட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களையே பெற்று 372 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக அகர்வாலும், தொடரின் நாயகனாக அஷ்வினும் தெரிவாகினர்.



## தேசிய மட்டத்துக்கு ஹஸான் தெரிவு

ஏ.எல்.எம். ஷினாஸ்

மருதமுனையில் சேர்ந்த கல்வியற் கல்லூரி பயிலுநர் ஆசிரியரும், விளையாட்டு வீரருமான எம்.எம்.எம். ஹஸான் குண்டு போடுதலில் தேசிய மட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டு சாதனை புரிந்துள்ளார். தேசிய இளைஞர் சேவைகள் சம்மேளனத்தின் 33ஆவது விளையாட்டு விழா தற்போது மாவட்ட ரீதியாக நடைபெற்று வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில், குண்டு போடுதலில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு தனது திறமையை வெளிப்படுத்தி முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தேரிவு செய்யப்பட்டுள்ளார். இரண்டாமிடத்தை அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும், மூன்றாம் இடத்தை அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் பெற்றுக் கொண்டனர். மருதமுனையை சேர்ந்த விளையாட்டு வீரர் எம். எம். எம்.ஹஸானுக்கு பிரதேச மக்கள் தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

இவர் மருதமுனை அல் -மினன் வீதியில் வசித்து வரும் ஷேகு இஸ்மாயில் மசூர் - அப்துல் கரீம் நபிஷா உம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், மருதமுனை அல் - ஹம்ரா வித்யாலயாம், ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார்.

எல்.பி.எல்:

## வொரியர்ஸை வென்ற ஜையன்ட்ஸ்

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற கண்டி வொரியர்ஸ் உடனான போட்டியில் தம்புள்ள ஜையன்ட்ஸ் வென்றது.

நேற்று முன்தினம் ஆரம்பித்த இத்தொடரின் இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஜையன்ட்ஸின் அணித்தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஜையன்ட்ஸ், பில் சோல்ட்டின் 64 (27), நிரோஷன் டிக்வெல்லவின் 37 (23) ஓட்டங்களின் மூலம் அதிரடியான ஆரம்பத்தைப் பெற்றது.

பின்னர் விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஷானகவின் 24 (18), ரமேஷ் மென்டிஸின் ஆட்டமிழக்காத 22 (11) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், லஹிரு குமார 4-0-34-3, அல்-அமின் ஹொஸைன் 4-0-36-2, றொவ்மன் பவல் 2-0-12-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 191 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வொரியர்ஸ் சார்பாக றொவ்மன் பவல் 42 (21), சஷிந்து கொலம்பகே 27 (16) ஓட்டங்களைப் பெற்றபோதும் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களையே பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ரமேஷ் மென்டிஸ் 4-0-21-3, நுவான்



**இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தம்புள்ள ஜையன்ட்ஸும், ஜஃப்னா கிங்ஸும் மோதவுள்ளதுடன், 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கண்டி வொரியர்ஸும் கோல் கிளாடியேட்டர்ஸும் மோதவுள்ளன.**

பிரதீப் 4-0-31-3, இம்ரான் தாஹீர் 4-0-28-1, நுவனிடு பெர்ணான்டோ 1-0-5-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக பில் சோல்ட் தெரிவானார்.

இந்நிலையில், நேற்றிரவு நடைபெற்ற ஜஃப்னா கிங்ஸுடனான போட்டியில் கோல் கிளாடியேட்டர்ஸ் வென்றிருந்தது.

இதேவேளை, இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தம்புள்ள ஜையன்ட்ஸும், ஜஃப்னா கிங்ஸும் மோதவுள்ளதுடன், 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கண்டி வொரியர்ஸும் கோல் கிளாடியேட்டர்ஸும் மோதவுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 7 டிசெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.